விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 19 புதன்கிழமை (01.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 044

## காணி விடுவிப்புக்கு உறுதியான பதில் என்ன?

# இராணுவமுகாம் முன் மக்கள் போராட்டம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கேப்பாப்புலவு கிராம சேவையாளர் பிரிவின் பிலவுக்குடியிருப்பு மக்கள், இராணுவமும் அரச அதிகாரிகளும் எம்மை ஏமாற்றுகின்றனர் என குற்றஞ்சாட்டியுள்ளதுடன் தமது காணி விடுவிப்பு தொடர்பான உறுதியான திகதியை வழங்குமாறு கூறி அங்குள்ள இராணுவ முகாம் முன்பாக இந்த போராட்டம் நேற்றிரவும் தொடர்ந்துள்ளது மக்கள் பலரும் ஒன்றுபட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க...

## ஜனவரி மாதத்தில் யாழில் 641 பேருக்கு டெங்கு!

### சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம ஜனவரி மாதத்தில் மட்டும் 641 பேர் டெங்கு நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளதெனவும் தீவிரமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால் உயிராபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும் என சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க...

## மாகாண அதிகாரங்களை பறிப்பதாக தெரிவித்து நிலைபேறு அபிவிருத்திச் சட்டமூலம் வடக்கு மாகாண சபையால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிப்பதாக கூறி மத்திய அரசினால் கொண்டு வரப்படவிருந்த இலங்கை நிலைபேறு அபிவிருத்தி சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரித்து, அதற்கான அங்கீகாரத்தையும் வழங்க மறுத்துள்ளது. வடக்கு மாகாண சபையின் 83ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதில் இறுதி விடயமாக மத்திய அரசினால் மாகாண சபைகளின் அங்கீகாரத்தை பெறுவதற்காக

23ஆம் பக்கம் பார்க்க...

## காட்டுப் பகுதியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா இலுப்பைக்குளம் பகுதியில் காட்டில் வைக்கப்பட்டிருந்த மின்சார பொறியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம்

23ஆம் பக்கம் பார்க்க...

## தீக்காயமடைந்த முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்குச்சி நெருப்பு தவறுதலாக பட்டு தீப்பற்றியதில் படுகாயமடைந்த முதியவர் ஒருவாரத்தின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சுதுமலை கிழக்கை சேர்ந்த கந்தையா பரமலிங்கம் (வயது 85) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே மேற்

24ஆம் பக்கம் பார்க்க...

## அபிவிருத்தி என்ற ஆயுதத்தை கையிலெடுத்து சிங்கள மயமாக்கலை முன்னெடுக்க முயற்சி

## மத்திய அரசை சாடுகிறார் முதலமைச்சர் சி.வி

(யாழ்ப்பாணம்)

சமஷ்டியை பற்றி பேசுவதற்கு விரும்பாத மத்திய அரசு மாகாணங்களின் அதிகாரங்களை பிடுங்குவதிலேயே தொடர்ந்தும் குறியாக இருப்பதாக சாடியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தொடர்ந்தும் இராணுவ மயமாக்கல், சிங்கள மயமாக்கலை முன்னெடுப்பதற்கு அபிவிருத்தி என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார்

23ஆம் பக்கம் பார்க்க...



## மைத்திரி உயிரிழப்பார்; ஜோதிடர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவமதிக்கும் வகையில் ஜோதிட கணிப்புக்களை வெளியிட்ட பிரபல ஜோதிடரான விஜித் ரோஹன வஜயமுனி குற்றபுலனாய்வு திணைகளத்தால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனவரி 26 இல் மரணிப்பார, மகிந்த ராஜபக்ஷ பிரதமராவார் மறறும் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதி

23ஆம் பக்கம் பார்க்க...

## தனியார் மருத்துவக் கல்லூரி பட்டதாரிகளை மருத்துவர்களாக பதிவு செய்வதற்கு உத்தரவு

### நீதிமன்றம் தீர்ப்பு; அரச மருத்துவ தரப்பு எதிர்ப்பு



(கொழும்பு)

நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரியிலிருந்து முதலாவதாக வெளியேறியுள்ள மருத்துவப் பட்டதாரிகளை மருத்துவர்களாக பதிவு செய்து கொள்ளுமாறு மேல் நீதிமன்றம் இலங்கை மருத்துவ சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

தங்களை மருத்துவர்களாக பதிவு செய்து கொள்ள இலங்கை மருத்துவ சபை மறுத்து வருவதாக

24ஆம் பக்கம் பார்க்க...

## சிறுப்பிட்டி கொலை

## 14 இராணுவத்தினரில் ஐவருக்கு பிணை!

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி பகுதியில் இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள 14 இராணுவத்தினரில் ஐவர் நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கை சேர்ந்த செல்வரத்தினம் ஜெயசீலன், நாகமணி சௌந்தரராஜன் ஆகிய இளைஞர்கள் இருவர் கடந்த 1997ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் திகதி மயிலங்

24ஆம் பக்கம் பார்க்க...

# வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய 8பேருக்கு பிணை

## கடும் நிபந்தனைகளுடன் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 8 இளைஞர்கள் கடும் நிபந்தனையுடன் யாழ் மேல் நீதிமன்றத்தால் நேற்றைய தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்

யாழில் கடந்த வருடம் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவை யாழ் பொலிஸார் தீவிர தேடுதலின் பின்னர் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இக்குழுவில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர்கள் உள்ளடங்குவதுடன் குறித்த நபர்களிடம் இருந்து வாள்கள், கைக் கோடரிகள் மற்றும் கைக்குண்டு போன்றன மீட்கப்பட்டதாக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர். கைது செய்யபபட்டவர்கள கடந்த 7 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த 8 சந்தேக நபர்களின் பிணை மனு யாழ் மேல் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்பட்டு நேற்றைய தினம யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர்களை கடுமையாக எச்சரித்ததுடன் ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் தண்டம விதித்ததுடன், 2இலட்சம பெறுமதியான 2 ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

அத்துடன் எதிர் வரும் ஏப்பிரல் மாதம வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் யாழ் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் உத்தரவிட்டதுடன் பிணை வழங்கப்படும் காலப்பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு மீண்டும் எக்காரணம் கொண்டும் பிணை வழாங்கப்படாது எனவும்தெரிவித்தார்.(செ-9)


பாராட்டி வாழ்த்துகிறோம்



செந்தில்ராஜக்குருக்கள் லலிதாதாஸ்
(Attorney -at- Law)

எமது மருமகன் செந்தில்ராஜக்குருக்கள் லலிதாதாஸ் அவர்கள் 26.01.2017 அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்நிலை பெற மனதார வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துபவர்கள் :*
திரு.திருமதி R.P.சர்மா குடும்பம்
(மாமா)


# உணவகங்களில் மாணவர்களுக்கு புகைப்பொருட்கள் விற்பனை

## கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் அமைந்துள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு புகைப் பொருட்கள் விற்பனை செய்யும் நடவடிக்கை அதிகரித்துள்ளதனால் அச்செயற்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மதுவரித்திணைக்களத்தினர் தொடர்சியான தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை இன்றிலிருந்து ஆரம்பிக்கவுள்ளனர்.

போதையற்ற நாடு எனும் தொணிப்பொருளிலான மாவட்ட மட்ட முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல் நேற்றைய தினம் யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. அதன்போதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த விடயம் தொடர்பாக அதிகாரிகள் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு அருகில் அமைந்துள்ள உணவகங்கள் மற்றும் பெட்டி கடைகளில் மாணவர்களுக்கு புகைப்பொருட்கள் விற்பனை செய்யும் நடவடிக்கை சமீப காலமாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக 21 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமாக தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்கின்றனர். இந்த நிலையில் உணவகங்களின் மறைவிடங்களிலும் மாணவர்கள் புகைப்பதனை அவதானிக்க முடிகிறது. இது தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

எனவே இச் செயற்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மது வரி திணைக்களத்தினர் குறித்த கடைகளில் கண்காணிப்பு நடவடிக்கையினை மேற்கொள்வதுடன் உடனடியாக வழக்கு பதிவு செய்ய வேண்டும் என அதிகாரிகளால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அக் கோரிக்கையினை தொடர்ந்து குறித்த சட்ட ரீதியற்ற செயற்பாட்டினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இந்த மாதத்தில் இருந்து தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் மது வரி திணைக்களத்தினர் ஈடுபடுவார்கள் என மதுவரித்திணைக்கள ஆணையாளர் தெரிவித்திருந்தார். (செ-9)


உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-7420)



பணிப்பெண் தேவை

யாழ்.கோண்டாவிலில் அரச ஊழியர் ஒருவரின் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு : 0771637433, 0779856841, 0776047241

(7806)


# கண்ணீர் அஞ்சலி



## மேரி சிசிலியா இராயப்பு

யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலையின் ஒய்வு பெற்ற ஆசிரியரும், இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி **வெலிசிற்றர் றமணி, ஜெறாட் ஜெயந்தன்** அவர்களின் அன்புத் தாயாருமான **மேரி சிசிலியா இராயப்பு** அவர்களின் மறைவிற்கு துயர் பகிர்வதுடன் அவரது ஆன்மா இறைவனில் அமைதியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை**

(781)

# யாழ்ப்பாண மாநகரசபை

## ஆதனவரிப்பகுதி

### நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பம்

**யாழ்பாண மாநகர சபையின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

01. விண்ணப்பதாரி யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்/யாழ் குடாநாட்டுக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், உடல் ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. சொந்தக் கையெழுத்தில் எழுதப்படும் விண்ணப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.
**விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :**
**முகவரி :**
**பிறந்த திகதி :**
**கல்வித்தகைமை :**

03. யாழ் மாநகர சபையில் கடமையாற்றும் நிரந்தர பதவி அலுவலர் அல்லது அதற்கு *சமனான அலுவலரது சிபார்சுக் கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.

04. பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

05. நடுக்கட்டு உத்தியோகத்தராக தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான (கொமிஷன்) கொடுப்பனவை பெறும் வகையில் நியமிக்கப்படுவர்.

06. நியமனம் பெறும் நடுக்கட்டு உத்தியோகத்தர் றொக்கப் பிணைப்பணமாக ரூபாய் இருபத்தையாயிரம் (25000) இனை யாழ்ப்பாண மாநகரசபையின் அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

07. **"நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்"** என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் யாவும் 2017.02.20 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக **"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

08. மேற்குறித்த பதவிக்கான நியமனம் பெறுவோர் நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது கோருவதற்கோ உரித்துடையவர்கள் அல்லர்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

**20.01.2017** (சி-7424)



பொன்.விநாயகமூர்த்தி - விநாயகமூர்த்தி சந்துரு

**சமூகப் பற்றாளர் பொன்.விநாயகமூர்த்தி அவர்கள்**

# நினைவு நிழற்குடை

## அங்குராற்பண நிகழ்வு

காலம் : இன்று (01.02.2017) புதன்கிழமை
நேரம் : காலை 9.30 மணி
இடம் : பழைய வைத்தியசாலை முன்பாக ஏ9 சாலை, கிளிநொச்சி.

அன்னாரின் நினைவினை மீட்ட இந்நிகழ்வுக்கு வருகைதருமாறு தங்களை அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள், *திருநகர், கிளிநொச்சி.*

(சி-7425)

# கிணற்றுக்குள் கழிவு நீரைச் சேகரித்துவரும் நாசகார செயலை பொலிஸ் நிறுத்த வேண்டும்

## யாழ். அரச அதிபர் உத்தரவு

வல்வெட்டித்துறை பகுதியிலுள்ள பாழடைந்த கிணற்றினுள் வல்வெட்டித்துறை பொலிஸார் கழிவுநீரை சேகரித்து வருவதாகவும் குறித்த செயற்பாட்டினை தம்மால் தடுத்து நிறுத்த முடியவில்லை எனவும் அப்பகுதி சுகாதாரப்பிரிவினரால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீரை பாதிக்கும் குறித்த நாசகார செயலை உடனடியாக நிறுத்த வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட டெங்கு மீளாய்வு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. அதன் போதே மேற்குறித்த தகவலை சுகாதாரப்பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு பின்புறமாக உள்ள தனியார் காணியினுள் பாழடைந்த ஒரு கிணறு உள்ளது. அக்கிணற்றினுள் வல்வெட்டித்துறை பொலிஸார் பல காலமாக கழிவு நீரை சேகரித்து வருவதுடன் கழிவுப் பொருட்களையும் வீசுகின்றனர்.

குளித்தல் மற்றும் சமையல் கழிவு நீர் அதற்குள் சேகரிக்கப்பட்டு வருகிறது. சுகாதாரப் பிரிவினரால் பலமுறை பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இது தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கமுடியவில்லை. தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. ஆனால் பொலிஸாரின் இந்த செயற்பாட்டால் இப் பகுதியில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பாக உள்ளதுடன் நிலத்தடி நீர் மசுபடுகின்றது. அதை நிறுத்துவதற்கு உரிய பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனை தொடர்ந்து கருத்து தெரிவித்த அரச அதிபர், சுற்றுச்சூழலை பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகளை பொலிஸாரோ பொதுமக்களோ செய்ய முடியாது. இச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தெரிவித்ததுடன் உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் தெரிவித்தார். (இ-9)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

7801

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# அரச அதிகாரிகள் மீதும் குற்றச்சாட்டு

# வீதியோரங்களில் கழிவுப்பொருட்களை வீசினால் இன்றிலிருந்து கடுமையான சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

***வீதியோரங்களில் குப்பை (கழிவுப்பொருட்கள்) வீசுபவர்களுக்கு எதிராக இன்றிலிருந்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என டெங்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. வீதியோரங்களில் கழிவுகளை வீசுபவர்களில் அதிகளவானவர்கள் அரச உத்தியோகத்தர்கள் எனவும் சுகாதாரத்துறையினர் இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியுள்ளனர்.***

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் தொடர்பான மீளாய்வு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் மேற்குறித்த விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலும் கழிவுகள் அகற்றும் செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஆளணி பற்றாக்குறை. இயந்திர பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

கழிவுகளை அகற்றும் செயற்பாடுகளில் நாம் முடிந்தளவு செயற்படுகின்ற போதிலும் பல இடங்களில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிக குறைவாக உள்ளது. கழிவுகளை தரம்பிரித்து அகற்றுவதில் பாரிய சிரமத்தினை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன் இச்செயற்பாட்டில் பொலிஸாரின் ஒத்துழைப்பு மிக மிக குறைவாகவுள்ளது. குற்றம் செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது மிகக் குறைவாகவுள்ளது. தண்டனைகள் அதிகமாக்கப்படும் பொழுது தான் குற்றங்களை குறைக்க முடியும்.

வீதியோரங்களில் தொடர்சியாக கழிவு பொருட்டகள் வீசப்பட்டு வருகின்றன. அதற்கு எதிராக தண்டனைகள் விதிக்கப்படுவதில்லை. நகர் பகுதியில் சட்டம் கடுமையாக்கப்பட்டால் வேறு பிரதேசங்களுக்கு கொண்டு சென்று கழிவுகளை கொட்டுகிறார்கள்.எனவே அனைத்து பிரதேசங்களிலும் ஒரே நேரத்தில் நடவடிக்கை கடுமையாக்கப்பட வேண்டும்.

வீதியோரங்களில் குப்பைகளை வீசிவிட்டு செல்பவர்களில் அதிகளவானவர்கள் அரச உத்தியோகத்தர்கள் என்பது பல இடங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவர்கள் குற்றத்தை செய்து விட்டு தப்பிக்கிறார்கள்.

இனிவரும் காலங்களில் இவை நிறுத்தப்பட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு என பொலிஸார் நியமிக்கப்பட்டிருந்தும் அவர்கள் கடமைக்கு வருவதில்லை.

வீதிகளில் கழிவுகளை வீசும் செயற்பாடுகள் கடந்த வருடங்களில் குறைவாக காணப்பட்ட போதும் தற்போது அதிகரித்துள்ளமைக்கான காரணத்தை கண்டுபிடித்து அதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை ஒவ்வொரு பகுதியினராலும் முன்னெடுக்கப்பட வேண்டும்

யாழ். மாநகர சபை கழிவு முகாமைத்துவம் வினைத்திறனான முறையில் நடைபெற வேண்டும். அத்துடன் பிரதேச சபைகளில் கழிவகற்றல் செயற்பாட்டில் தரம்பிரித்து அகற்றும் முறைகள் பின்பற்றப்பட வேண்டும். இச்செயற்பாடுகள் அனைத்துக்கும் பொலிஸார் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் கழிவு முகாமைத்துவத்தை சீரான முறையில் மேற்கொள்ள முடியும் என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் உடனடியாக பொலிஸார் குறித்த செயற்பாடுகளை தீவிரமாக கண்காணிப்பதுடன் கழிவுகளை வீசுகிறவர்கள் மற்றும் ஒழுங்கற்ற முறையில் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவோர்களைக் கண்டறிந்து உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அதற்காக பொலிஸர் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்படுவார்கள் எனவும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த- ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

7801

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# உள்நாட்டு வைத்திய முறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

உள்நாட்டு வைத்திய முறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மேற்கத்தேய நாடுகளால் அடைய முடியாத வைத்திய இலக்குகளை, இலங்கையின் ஆயுர்வேத முறையால் எட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்தார். இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத வைத்திய முறை மருந்தான பிராணஜீவ அறிமுக நிகழ்வு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற போது, பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இலங்கைக்கு மேலைத்தேய வைத்திய முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது உள்நாட்டு வைத்திய முறையில் பல்வேறு சிறப்புகள் இருந்தாலும் அவை இன்றைய நாட்களில் மறைக்கப்பட்டு அல்லது நடைமுறையில் குறைந்தளவு பாவனையில் உள்ளன.

ஆயுர்வேத மருத்துவ முறைகளை அறிந்தவர்கள் அதனை மற்றவர்களுக்கு சொல்வதில்லை. அது பரம்பரை வழியாகவே செல்கின்றது. திடீரென்று அவர் உயிரிழந்துவிட்டால் அவருடன் அந்த வைத்திய முறை அழிந்துவிடுகின்றது. புத்தகங்களில் இருந்தாலும் அவையும் முழுமையான முறையில்பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொடரை வெல்லும் போட்டி இன்று? இந்தியா - இங்கிலாந்து களத்தில்

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி 20 ஓவர் ஆட்டம் பெங்களூரில் இன்று நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் சமபலம் பொருந்தி காணப்படுவதால் தொடரை வெல்வது யார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான மூன்று 20 ஓவர் போட்டித் தொடரில் கான்பூரில நடந்த முதல் ஆட்டத்தில் இங்கிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்திலும், நாக்பூரில் நடைபெற்ற 2-வது போட்டியில் இந்தியா 5 ஓட்ட வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.


இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 3-வது மற்றும் கடைசி 20 ஓவர் ஆட்டம் கர்நாடகா மாநிலம பெங்களூரில் இன்று நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் சமபலம் பொருந்தி காணப்படுவதால் தொடரை வெல்வது யார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா : விராட் கோலி (கப்டன்), லோகேஷ் ராகுல், ரெய்னா, யுவராஜ்சிங், டோனி, மனிஷ் பாண்டே, ஹர்த்திக் பாண்டியா, அமித் மிஸ்ரா, யுசுவேந்திர சகால், ஆசிஷ் நெக்ரா, பும்ரா, பர்வேஷ் ரசூல், புவனேஷ்வர் குமார், ரிஷப் பண்ட், மன்தீப் சிங்.

இங்கிலாந்து : மோர்கன் (கப்டன்), ஜேசன் ராய், சாம் பில்லிங்ஸ், ஜோரூட், பென் ஸ்டோக்ஸ், பட்லர், மொயின் அலி, ஜோர்டான், ஆதில் ரஷீத், மில்ஸ், டேவிட் வில்லி, பேர்ஸ்டோவ், ஜேக்பால், புளுன்கெட், டாசன். (க)

## பிரதமரின் உருவப்பொம்மை எரிப்பு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்பொம்மையொன்றை எரித்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் வைத்திய பீட மாணவர் ஒன்றியம், மாலபே சயிட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக தொடர்ந்தும் போராடவுள்ளதாக அறிவித்துள்ளது.

நேற்றைய தினம் சயிட்டம் (SAITM) நிறுவனத்தின் மருத்துவ பட்டத்துக்கு சட்ட ரீதியிலான பெறுமதியை அளித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடுத்து புறக்கோட்டை, போதி மரச் சந்தி வரையில் நீதிமன்ற வளாகத்தில் இருந்து எதிர்ப்பு ஊர்வலமாக சென்ற போதே அந்த மாணவர் ஒன்றியம் மேற்படி அறிவிப்பை விடுத்தது.

நீதிமன்ற தீர்ப்பினால் அதிருப்தியடைந்த மாணவர்கள் அங்கிருந்து புறக்கோட்டை நோக்கி பதாதைகளைத் தாங்கி டெக்னிகல் சந்தியூடாக திரும்பி புறக்கோட்டை நோக்கி பேரணியாக சென்றனர்.

இந் நிலையில் போதி மர சந்தி வரை சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்பொம்மையை எரித்து. ரணில் - மைத்திரி அரசாங்கம் சயிட்டத்தை விற்றுவிட்டனர் என வீதியில் எழுதிவிட்டு கலைந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இலங்கை - தென்னாபிரிக்கா 2வது ஒருநாள் போட்டி இன்று



தென்னாபிரிக்கா- இலங்கை அணிகள் மோதும் 2-வது ஒருநாள் போட்டி ஜோகன்னஸ் பர்க்கில்.

இன்று நடைபெறவுள்ளது

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இலங்கை பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இதன் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 3-0 என்ற கணக்கிலும், 20 ஓவர் தொடரை இலங்கை 2-1 என்ற கணக்கிலும் வென்றன.

5 ஒருநாள் போட்டித் தொடரில் போர்ட் எலிசபெத்தில் நடந்த முதல் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது.

தென்னாபிரிக்கா- இலங்கை அணிகள் மோதும் 2-வது ஒருநாள் போட்டி ஜோகன்னஸ் பர்க்கில் இன்று நடைபெறவுள்ளது.

முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இலங்கை பதிலடி கொடுக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் இந்தப் போட்டியிலும் வெல்லும் ஆர்வத்தில் தென்னாபிரிக்கா உள்ளது. (க)

# பெற்றோல் குண்டு; வாள்வீச்சு; பொலிஸ் விரிவான விசாரணை

## ஒருவர் கைது; தேடுதலில் பலர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் அரசடி பகுதியில் இடம்பெற்ற பெற்றோல் குண்டு மற்றும் வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டவர்களில் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் யாழ்.மாவட்டத்திற்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணியளவில் நல்லூர் அரசடி பகுதியில் உள்ள வியாபார நிலையமொன்றுக்கு வந்த சமூக விரோத மோட்டார் சைக்கிள் கும்பலொன்று குறித்த வியாபார நிலையத்தில் இருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை நடத்தியிருந்ததுடன் வியாபார நிலையத்தையும் பெற்றோல் குண்டெறிந்து எரித்து நாசப்படுத்தியிருந்தனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த நாசகார தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக வினவிய போதே குறித்த உயர் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது விடயம் தொடர்பாக குறித்த உயர் அதிகாரி வலம்புரிக்கு மேலும் தெரிவித்திருப்பதாவது குறித்த வாள்வெட்டு மற்றும் பெற்றோல் குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஒருவரை கைது செய்துள்ளோம்.

மேலும் இச் சம்பவமானது இடம்பெற்ற பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகள் அருகில் இருந்த கண்காணிப்பு கமராவில் இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பதிவாகிய வீடியோ மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் இவ் நாசகார செயலில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்திருந்தோம். அத்துடன் இச் சம்பவத்தில் ஈடுபட்ட ஏனையவர்கள் பல இடங்களை சேர்ந்தவர்களாக உள்ளார்கள்.

குறிப்பாக மானிப்பாய், குருநகர், சுன்னாகம், இணுவில், கோப்பாய் போன்ற பகுதிகளை சார்ந்தவர்களாக உள்ளதுடன் இவர்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்று கூடி அவர்கள் வகுத்த திட்டமொன்றின் அடிப்படையிலேயே இவ் வன்முறை சம்பவத்தை நிகழ்த்தியுள்ளார்கள்.

இதனடிப்படையில் இவர்கள் அனைவரையும் கைது செய்வதற்கான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளூடாக சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய எட்டு பேரினையும் கைது செய்வதற்கான இடத்தை அண்மித்து விட்டோம்.

இவற்றைவிட நேற்று முன்தினம் இடம்பெற்ற நாசகார வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட இருவருக்கும் பாதுகாப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்டத்திற்கு பொறுப்பான குறித்த உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்திருந்தார்.

இதேவேளை கடந்த இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் பிறிதொரு இடத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறை சம்பவத்தில் ஈடுபட்ட ஐவரை யாழ். பொலிஸ் நிலைய பொலிஸார் கைது செய்திருந்ததுடன் அவர்களிடமிருந்து வாள்கள் சிலவற்றையும் கைப்பற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)


# மரண அறிவித்தல்



(C-7426)

காரைநகர் வலந்தலை சடையாளியை பிறப்பிடமாகவும்

இல.24, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13 ஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த

## திருமதி மங்கையற்கரசி கனகரத்தினம்

அவர்கள் 29.01.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.M.கனகரத்தினம் (உரிமையாளர் மகாலட்சுமி ஸ்டோர்ஸ், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற (வையாபுரி) முருகேசு, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மகாலட்சுமி (கொழும்பு), பாலசுப்பிரமணியம் (உரிமையாளர், யோகராஜா பிரதர்ஸ், கொழும்பு) தனலட்சுமி (கொழும்பு), ராஜலட்சுமி (Canada), உருத்திரசிங்கம் (ACMA Australia),பாக்கியலட்சுமி (Canada), சந்தானலட்சுமி (Australia), யோகராஜா (Chartered Accountant, Colombo), சத்தியலட்சுமி (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.கனகநாதன் (கொழும்பு), உஷாதேவி (கொழும்பு), கலைச்செல்வன் (Ministry of Megapolis), சிவலோகநாதன் (Engineer, Canada) செந்தமிழ் செல்வி (Austalia), ஈஸ்வரன் (Engineer, Canada), ஸ்ரீதரன் (Engineer, Australia), சிவாஞ்சலி (Director, NIBM) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.கலைச்செல்வன் (Australia), துர்க்கா (Australia), தவச்செல்வன் (Engineer, KDDI Global, Ny USA), சிவப்பிரியா (USA), அருட்செல்வன் (System Engineer, London Stock Exchange), சுகர்னா (Accountant, KPMG, Sanfransico, USA), பிரகாஷ் (Software Engineer, Solcom Inc, Califonia) மயூரன் (Bio Medical Engineer, USA) அரவிந்தன் (Software Engineer IBM California), கஜானந்தா (Network Administrator, Kreston MNS & Co), கலைப்பிரியா (இந்தியா), ராஜேஸ்குமார் (Manager, Athti Enterprises) Dr.நிஷானந்தா (விரிவுரையாளர், பேராதனை), அனோஜன் (Engineer, Canada), அஜிலன் (Canada), நிவேதிகா (Pharmacist Student, Australia), கோபிகா (Bio Medical Science, Canada), கோபினா (Bio Medical Science, Canada), கிருஷாந் (Engineering Student, Waterloo University, Canada), ஹரிப்பிரகாஷ் (Medical Student, Australia), தாணியா (Medical Student, Australia), கணன் (Australia), அபிலாஷ் (St.Thomas, Mt.Lavinia) ஆகியோரின் பாட்டியும் லோகிதன் (Australia), கார்த்திகன் (Australia), மதுரன் (USA), தக்ஷா (இந்தியா) ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், விஜயரத்தினம், லக்ஷ்மிப்பிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் சரஸ்வதி, ராசம்மா, அன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான நடராஜா பரமசாமி, தம்பிப்பிள்ளை, கணேசபிள்ளை, சரஸ்வதி அம்மா மற்றும் மார்க்கண்டு, சிவஞானம் ஆகியோரின் சகலையுமாவார். அன்னாரின் பூதவுடல் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் 11 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவிக்கிறோம்.

தகவல்: க.பாலசுப்பிரமணியம் (மகன்) தொடர்பு: 077 7242322, 0112327875

# இலங்கையில் போதைப்பொருள் பாவனையால் ஒவ்வொரு வருடமும் 40 ஆயிரம் பேர் மரணம்

**(கொழும்பு) இலங்கையில் போதைப்பொருள் பாவனையால் வருடாந்தம் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என போதைப் பொருள் தடுப்புத் தொடர்பான ஜனாதிபதிச் செயலணியின் தலைவர் எச்.எம். திலகரட்ண தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக 35 ஆயிரம் கைம்பெண்களும் உருவாகுவதுடன், 80 ஆயிரம் பிள்ளைகளும் அநாதரவாகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்புத்தொடர்பானவிசேடவேலைத்திட்டம் பற்றிய விழிப்புணர்வுக் கூட்டம் ஏறாவூர் நகர பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போதைத தடுப்புத் தொடர்பான ஜனாதிபதி விசேட செயலணியின் 10 நிபுணர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் திணைக்கள, கூட்டுத்தாபன தலைவர்கள், அலுவலர்களும் கலந்துகொண்டனர். அங்கு அவர் மேலும் தெரிவித்த போது, "போதையிலிருந்து விடுதலை பெற்ற நாடு என்ற தொனிப்பொருளில் இலட்சியக் கனவு நோக்கிய திட்டங்களை ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய செயலணிமேற்கொண்டு வருகின்றது. போதைப் பொருள் பாவனையிலிருந்து எமது நாடு விடுபடுவதானது மகிழ்ச்சி தரக்கூடிய விடயம். அந்தச் சாதனையை நாம் அடைந்து விட்டால், அதுவே இந்த நாட்டுக்கு பெரு வெற்றியாக அமையும். இந்த நாட்டு மக்களுக்கு போதைப் பொருளினால் ஏற்படும் இழப்பு என்பது ஈடுசெய்ய முடியாததாக இருந்து வருகின்றது.

எனவே, இது தொடர்பான ஜனாதிபதியின் இலட்சியக் கனவுடன் நாட்டு மக்கள் அனைவரும் பயணித்தால் சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


edexcel PEARSON CIOB RICS

INTAKE NOW ON



வெளியாகியதா A/L பெறுபேறுகள்?
கை நழுவியதா பல்கலைக்கழகம் நுழையும் கனவுகள்?
கவலையை விடுங்கள்...
BCAS Campus உடன் இணையுங்கள்

No.1 PEARSON Partner in Sri Lanka

BUSINESS MANAGEMENT MARKETING | HRM — HND — Leading to BA (Hons) from the UK Universities

QUANTITY SURVEYING — HND — Leading to BSc (Hons) from the UK Universities

BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — HND — Leading to BSc (Hons) from the UK Universities

CIVIL ENGINEERING — HND — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

TELECOM ENGINEERING — HND — Leading to BEng (Hons) from the UK Universities

COMPUTING — HND — Leading to BSc (Hons) from the UK Universities

ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — HND — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LAW — LLB — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Recognized TVEC Approved

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus 16, Point Pedro Road, Jaffna.

City Campus 256, Galle Road, Colombo 6. T: 011 236 4459

Mount Campus 54, Galle Road, Mt. Lavinia. T: 011 272 8082

Kandy Campus 344, Peradeniya Road, Kandy. T: 081 222 4731

JAFFNA 077 710 2131 077 960 3753 COLOMBO 077 283 4595

Batti Campus 294, 1/4, Trinco Road, Batticaloa. T: 065 222 8451

Wayamba Campus 103, Dambulla Road, Kurunegala. T: 037 223 3339

18 YEARS ISO 9001:2008

Corporate Office 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217

Kalmunai Campus 392/1, Main Street, Kalmunai. T: 067 222 6899

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016 | Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016 | Academic Impact Winner by QSi - UK 2016 | Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014 | BTEC Gold Partner by Pearson - UK 2013 | Performance Excellence Award by Pearson - UK 2011 | Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 221 9910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk


## சட்டவிரோதமாக நுழைபவர்களை தடுக்க இந்திய கடற்படையினர் விசேட ரோந்து

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமரன முறையில் இந்தியாவுக்குள் ஊடுருபுபவர்களைத் தடுப்பதற்காக, இந்தியப் பாதுகாப்புத் தரப்பினர், பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இராமேஸ்வரம், தனுஷ்கோடி, அரிச்சல்முனையில் இருந்து இலங்கை தலைமன்னார் வரையிலான கடற்பகுதியில் ஏராளமான மணல் திட்டுகள் உள்ளன. இவற்றில் ஐந்து மணல் திட்டுகள், இந்திய கடல் எல்லைக்குள் அமைந்துள்ளன. ஏனையவை, இலங்கை கடல் எல்லைக்குள் அமைந்துள்ளன. இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப் படகுகளில் செல்பவர்கள், இந்திய எல்லைக்குள் உள்ள மணல் திட்டுகளில் இறக்கி விடப்படுகின்றனர். இவர்களை, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சில மீனவர்கள், தங்கள் படகுகளில் அழைத்துச் செல்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு, மணல் திட்டுகள் வழியாக, இந்தியாவுக்குள் இலங்கையர்கள் ஊடுருவுவதையும் தடுக்கும் விதமாக, இந்தியக் கடற்படையினரால் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தியுள்ளன. அந்த வகையில், மன்னார் வளைகுடா, தனுஷ்கோடி அரிச்சல்முனை, இந்திய எல்லை மணல்திட்டு ஆகிய பகுதிகளில் இந்தியக் கடற்படையினர், தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று இந்திய ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (இ-7)

## இராசி பலன்

01.02.2017

(தை 19, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 2.38 மணிவரை

உத்திரட்டாதி முன்னிரவு 10.30 மணிவரை

சுபநேரம் 5.06-6.36 மணிவரை

இராகுகாலம் 12.36-2.06 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ், சுக் சந் | | | |
| கேது | கிரகநிலை | | |
| சூரி புத | சந்திராஷ்டமம் மகம், பூரம் | | ராகு |
| | சனி | குரு | |

**மேடம்:** மன அமைதி கூடும் நாள், பயணத்தால் பலனுண்டு, தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர்.

**இடபம்:** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்களின் வருகையுண்டு.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், புதிய பொருட்கள் வாங்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** வெறுத்து ஒதுக்கப்பட்ட சிலரே உங்களிடம் உதவி கேட்டு வரலாம், மறதியால் தவறவிட்ட காரியங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** நினைத்த காரியத்தை எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** தூரத்து உறவினர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**தனுசு:** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம். சுபகாரியச் செலவுகள் கூடும் நாள்.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம்.

**கும்பம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மீனம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் வளம் காணும் நாள், ஆழ்ந்த சிந்தையுண்டு, கோபத்தைக் குறைப்பது நல்லது.

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி (A.R.V.) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிட்டுள்ளது.

01.02.2017:- மூத்த விநாயகர் சனசமூக நிலையம் காலை 9.00-மு.ப.11.00, ஆசீர்வாதப்பர் வீதி, சுகாதார கல்விமையம் மு.ப.11.00-பி.ப.1.00,நாயன்மார் வீதி சுகாதார கல்விமையம் பி.ப.2.30-பி.ப. 4.00, 02.02.2017 :- யாக்கோவா பாலர் பாடசாலை காலை 09.00-மு.ப.11.00, வெயிலுகந்தபிள்ளையார் கோவிலடி செம்மணி வீதி மு.ப. 11.00-பி.ப.1.00, கடுக்காய் வீதி பி.ப.2.30-பி.ப.4.00, 03.02. 2017:- நாவலர் வீதி ஆனைப்பந்திசந்தி காலை09.00-மு.ப.11.00, பருத்தித்துறை வீதி உணர் கலைக் கல்லூரி அருகாமை மு.ப.11.00-பி.ப.1.00, அரசடி ஜனசக்தி ச.நிலையம் பி.ப.2.30-பி.ப.4.00,

06.02.2017:- பழம் வீதி ஞான சோதி ச.ச.நிலையம் காலை 09.00-மு.ப.11.00,சிவன் பதுவீதி மு.ப.11.00- பி.ப.1.00, மணல்தறை லேன் ஜமுனா வீதி பி.ப.2.30-பி.ப.4.00, 07.02.2017:- ஜமுனா வீதி சு. கமையம் காலை 09.00-மு.ப.11.00, சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதி மு.ப.11.00-பி.ப.1.00, செட்டியார்.தோட்டம் பகுதி பி.ப.2.30-பி.ப.4.00, 08.02.2017:- வைமன் வீதி, எடிசன் அக்டமி அருகாமை காலை09.00-மு.ப.11.00, அம்மன் வீதி மு.ப.11.00-பி.ப.1.00, முத்தமிழ் முன்பள்ளி ஆடிய பாத மட வீதி பி.ப.2.30-பி.ப.4.00, 09.02. 2017:- சங்கிலியன்வீதி காலை 09.00-மு.ப.11.00, கொண்டலடிச் சந்திமு.ப.11.00-பி.ப.1.00, கோவில் வீதி பண்டாரக்குளம் பி.ப. 2.30-பி.ப.4.00, 13.02.2017:- செட்டித்தெரு நல்லூர் முருகன் சனசமூக நிலையம் காலை.09.00-மு.ப. 11.00, நல்லூர் குறுக்குத் தெருச் சந்தி மு.ப.11.00-பி.ப.1.00, கைலாசப் பிள்ளையார் கோவிலடி, கோவில் வீதி பி.ப.2.30-பி.ப.4.00, 14.02. 2017 துர்க்கா மணிமண்டபத்தடி கோயில்வீதிகாலை.09.00-மு.ப.11.00, பண்டாரக்குளம் மு.ப.11.00-பி.ப. 1.00, கொண்டலடி பி.ப.2.30-பி.ப.4.00, 15.02.2017:- சட்டநாதர் கோவிலடி காலை09.00-மு.ப. 11.00, அனைத்துப் பகுதியும் நடமாடும் சேவை காலை09.00-மு.ப. 11.00, அனைத்துப் பகுதியும் நடமாடும் சேவை பி.ப.2.30-பி.ப. 4.00 நடைபெறும் என யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ



ஊரெழு கிழக்கு வளர்பிறை பாலர் பாடசாலையின் கால்கோள் விழாவும் பெற்றோார் தினவிழாவும் அண்மையில் மன்மதராசன் தலைமையில் நாவலம்பதி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும் புதுமுக மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதனையும் மாணவர்களது கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.(படம்:-புன்னாலைக்கட்டுவான் செய்தியாளர்)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை (02.02.2017) பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இளைப்பாறிய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய எஸ். எம்.பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பி. அம்பிகைபாகன், கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி. மங்கசேஸ்வரன், துறைசார் விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி உத்தியோகத்தர் எஸ்.ஜணாங்கனன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ

# போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம்

## மாகாணசபை உறுப்பினர் விந்தன் அழைப்பு



போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மீள்விப்பதன்மூலமே எமது இனத்தை முன்னேற்ற முடியும் என வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட வறுமை நிலையில் உள்ள யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட இருபது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் .கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரத்தினைக் காப்பாற்றுவதற்கு மத்திய அரசாங்கத்தின் திட்டங்களை நம்ப முடியவில்லை. நாம் மாகாண மட்டத்தில் துரிதகதியில் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

போரின் காரணமாக எமது மக்கள். உடைமைகள் மற்றும் தொழில் செய்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் சகலவற்றினையும் இழந்துள்ளனர். அவ்வாறு இழந்து நிற்கும் மக்களை மீண்டும் வாழ்வாதார ரீதியில் கூட மீள்விப்பதற்கு நாட்டின் ஆட்சியாளர்கள் தயாரில்லை.

அத்துடன் எமது இனம் என்ற வகையில் நாம் முன்னேற்றமான ஓர்வாழ்க்கையினை வாழும்போது தான் இன ரீதியிலான முன்னேற்றங்களையும் நாம் அடைந்து கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

திருநெல்வேலி கிழக்கு திருவருள் மிகு ஸ்ரீ பூத நாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 9ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ





கொழும்பு நிட்டம்புவைச் சேர்ந்த ஹார்பேட் பீரீஸ் என்பவர் இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு துவிச்சக்கர வண்டியில் இலங்கையைச் சுற்றி வரும் நோக்கில் கடந்த 28ஆம் திகதி காலிமுகத்திடலில் இருந்து தனது பயணத்தை தொடர்ந்தார். நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த அவர் மீண்டும் பருத் தித்துறை முனையிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்தார். எதிர்வரும் 4ஆம் திகதி காலிமுகத்திடலைச் சென்றடையவுள்ளார். (படம்:- மகாலிங்கம்)

## தீயினால் ஏற்படும் அனர்த்தத்தை தவிர்த்தல் தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அரச, அரச சார்பற்ற தனியார் அமைப்புக்கள் மற்றும் பெருமளவு பொதுமக்கள் கூடுகின்ற இடங்களின் உரிமையாளர்கள் தங்கள் கட்டடங்களில் கட்டட விஸ்தீரணத்திற்கு ஏற்றதாக தீ பாதுகாப்பு மற்றும் அனர்த்த நடவடிக்கைகள் தொடர்பான திட்டம் ஒன்றை வைத்திருப்பது அவசியமாகின்றது.

அத்திட்டங்களை ஏற்கனவே வைத்திருப்பவர்கள்அவற்றின்இயங்கு திறன் குறித்து அவ்வப்போது கால அட்டவணைக்கேற்ப பரிசோதித்துக் கொள்ள வேண் டும்.

அண்மைய தீ அனர்த்தம் ஒன்றின் போது குறித்த திட்டம் செயற்படு நிலையில் இல்லாதிருந்தது அவதானிக்கப்ட்டுள்ளது. தீ அனர்த்தங்களின் போது குறித்த கட்டடங்களில் உடனடி நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே கடமைகள் வழங்கப்பட்டுள்ள அந்த நிறுவனங்களின் ஊழியர்கள் மாநகர சபையில் தீயணைப்பு பிரிவிற்கு அறிவித்து விட்டு உடனடியாக செயற்பாடுகளில் இறங்குதல் பாரிய சேதங்களை இயன்றளவு குறைக்க உதவும். இதற்கான ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் பெற்றுக் கொள்வதற்கு மாநகர சபையின தீயணைப்பு பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம், தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0213207777,0212228874 என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார்.(இ

## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற "ரோயல் குளுக்கோஸ்"

PACKED BY: ROYAL INDUSTRIES, Colombo-13 TP:- 077 727 7670

தற்போது புதிய வடிவில்!!



இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

"ரோயல் குளுக்கோஸ்"

தொடர்புகளுக்கு

சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567


# 90 வீதமான அரச நிறுவனங்களுக்கு தகவல் அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

90 வீதமான அரச நிறுவனங்களில் தகவல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தற்போதைக்கு 670 அரச திணைக்களங்களில் தகவல் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் பீ.கே.எஸ்.ரவீந்திர தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 3 ஆம் திகதி தொடக்கம் தகவல் அறியும் சட்டமூலம் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது. பெப்ரவரி 17ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து அரச நிறுவனங்களிலும் தகவல் அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.


தகவல் அதிகாரிகள் நியமிக்கப்படும் வரை குறித்த திணைக்களங்களின் தலைவர்கள், கோரப்படும் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய கடமைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

அத்துடன் தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெளிநாட்டு நிதியுதவியில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்துக்கு சேவைகளை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பொதுமக்கள் கோரும் தகவல்களை அளிக்கும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி சிவசுப்பிரமணியம் பிரவீணா (B.Com)

29.01.2017 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வணிகமாணி பட்டம் பெற்றுக்கொண்ட எமது பாடசாலையின் அலுவலக கனிஷ்ட உத்தியோகத்தர் செல்வி சிவசுப்பிரமணியம் பிரவீணா (B.Com) மென்மேலும் பல பட்டங்கள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம், காங்கேசன்துறை.

ஆசிரியர் நலன்புரி கழகம்

(7803)

## விண்ணப்பம் கோரல்

"அதித்தீரன் மின்சார பொறியியல் இலக்கு" நிறுவனத்தின் காங்கேசன்துறை புதிய கிளைக்கு கீழ்க்காணும் பயிலுநர்கள், பணியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை எமது ஈமெயில் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Athithii1@gmail.com

ஹ மின்னியலாளர்- NVQ 4 தகைமைச் சான்றிதழ்

ஹ உதவியாளர்-NVQ 3 தகைமைச் சான்றிதழ்

ஹ மின்னியந்திரங்கள் மீள்முறுக்குநர் NVQ 4 தகைமைச் சான்றிதழ்

ஹ கட்டட கட்டுமான தொழில்நுட்பம் NVQ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் அறிமுறையும் செயன்முறையும் மூன்று வருடத்திற்கு குறையாத தகுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

ஹ கூலி/ இளநிலை தொழிலாளர்கள்.

விண்ணப்பங்களில் தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், விண்ணப்பிக்கும் நிலை, (பணியாளர்/ பயிலுநர்)

எமது நிறுவன செயற்திறன்களை Piriyatharshen Kumarasamy (google+) Athitheiran Piriyatharshen (முகநூல்) பார்வையிடலாம்.

(7681) இயக்குநர்

## பதவி வெற்றிடம்

**A/L பரீட்சையின் பின்...**

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொள்ளும் நீங்கள் தற்போது வாழ்க்கைக்கு புதிதாக முகம் கொடுப்பதற்கும் இலக்குகளை வெற்றி கொள்வதற்கும் இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிதி நிறுவனம் ஒன்றில் அங்கத்தவராகும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்துள்ளது. உங்களுக்கு தரப்பட்ட இலக்குகளைத் தாண்டிச் செல்ல முடியுமாயின் தொழிலுக்கும் வானம் வரை உயர்ந்து செல்லும் வாய்ப்பை நாம் வழங்குவோம். உங்கள் பயணத்தினை இப்பொழுதே ஆரம்பியுங்கள். (7692)

**62/6, Stanley Road, Jaffna.T.P-077 712 1868**

## கேள்வி அறிவித்தல் - 2017

**மாவட்ட செயலகம், கிளிநொச்சி.**

**கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. சுத்திகரிப்பு சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. பாதுகாப்பு சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் 02.02.2017 தொடக்கம் 17.02.2017 வரை அலுவலக நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000 உம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20.02.2017 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக செய்லக நிர்வாகக் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்க முடியும்.

(சி-7410) **சுந்தரம் அருமைநாயகம், மாவட்டச் செயலர், கிளிநொச்சி.**

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1982 இந்து
  நட்சத்திரம்: விசாகம்
  உயரம்: 6'
  தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
  தொ.இ: B/6848
- பிறப்பு: 1981 இந்து
  நட்சத்திரம்: ரேவதி
  கி.பா: 6
  உயரம்: 5'5"
  தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
  தொ.இ: B/6849
- பிறப்பு: 1979 இந்து
  நட்சத்திரம்: சதயம்
  கி.பா: 140 செவ் 1 இல்
  உயரம்: 170cm
  தகைமை/தொழில்:HNDA,B.COM/ அரசதொழில்
  தொ.இ: B/6850
- பிறப்பு: 1985 இந்து
  நட்சத்திரம்: பூசம்
  கி.பா: 66 செவ் 4 இல்
  உயரம்: 5'10"
  தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன் PR
  தொ.இ: B/6851

### இவர்களுக்கு மணமகன் தேவை


- பிறப்பு: 1982 இந்து
  நட்சத்திரம்: ஆயிலியம்
  கி.பா: செவ் 12 இல்
  தகைமை/தொழில்:O/L
  எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
  தொ.இ: G/6876
- பிறப்பு: 1975 இந்து
  நட்சத்திரம்: கார்த்திகை
  தகைமை/தொழில்:O/L
  தொ.இ: G/6884
- பிறப்பு: 1987 NON RC
  உயரம்: 5'
  தகைமை/தொழில்:O/L
  தொ.இ: G/6890
- பிறப்பு: 1989 இந்து
  நட்சத்திரம்: மகம்
  கி.பா: 72 செவ் 7 இல்
  உயரம்: 5'8"
  தகைமை/தொழில்:BBA/கணக்காளர்
  தொ.இ: G/6891

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

## வவுனியா நகரில்

# இரண்டு வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

## சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதானார்





(குருமன்காடு)

வவுனியாநகரில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக அதன் உரிமையாளர்களினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை வேளை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரின் ஹொரவப் பொத்தானை வீதியிலுள்ள இஸ்லாமிய கலாசார மண்டபத்தின் எதிரே அமைந்திருந்த புடைவை விற்பனை நிலையம் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையம் ஆகிய இரு வர்த்தக நிலையங்களிலேயே திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வர்த்தகநிலையங்களின் உரிமையாளர்கள் நேற்று முன்தினமிரவு கடைகளை பூட்டிவிட்டு வீடு சென்று நேற்றுக் காலை திறக்கச் சென்ற போதே முன்பக்க கதவுகள் உடைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது.

இதனையடுத்து உள்நுழைந்து பார்த்தவேளை பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயிருந்தமை தெரிய வந்ததாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை, திருடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பான விபரங்கள் முழுமையாக தெரிய வராத நிலையில் புடைவைக் கடையில் இருந்த இரண்டு இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளது என அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார். புடைவைக் கடையில் சீசீரிவி கமரா பொருத்தப்பட்டிருந்த போதும் அது சம்பவ தினத்தில் நிறுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததுடன் அவரது வீட்டில் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸார் கட்டுத்துவக்கு ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தப்போது நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-250)




# வயலின் வரம்பில் இருந்து குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

## சின்னடம்பன் கிராமத்தில் சம்பவம்



கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள சின்னடம்பன் கிராமத்திலுள்ள நெல் வயல் ஒன்றின் வரம்பிலிருந்து குடுமபஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மீட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அவசர பொலிஸ் சேவையான 119, இலக்கத்திற்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய கனகராயன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சின்னடம்பன் கிராமத்திற்கு சென்று தகவல் வழங்கிய நபருடன் தொடர்பு கொண்டு வினவிய போது தமது தந்தை தங்களது நெல் வயலுக்கு பிற்பகல் 3.30 மணிக்கு சென்ற நிலையில் அவர் மாலை 6 மணியாகியும் வீடு திரும்பவில்லை என்றும், அவரது தொலைபேசியும் செயலிழந்துள்ளதாக வீட்டார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸாரும், குடுபத்தினரும் மற்றும் கிராம மக்களும் இணைந்து அவர் சென்ற வயல் பிரதேசம் மற்றும் காட்டுப்பகுதி ஆகிய இடங்களில் தேடிய நிலையில் பிரஸ்தாப நபரைக்காணாத நிலையில் இருட்டியதை அடுத்து, தேடுதலை ஃகவிட்டுள்ளனர்.

இதனையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை குடும்பத்தினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து மீண்டும் வயல் பிரதேசத்திற்கு சென்று தேடிய போது குடும்பஸ்தர் நெல்வயலில் நெற்பயிரின் வரம்புக்கிடையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, கனகராயன் குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை மேற் கொண்ட பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்ததுடன் விசாரணைகளையும் முன னெடுத்து வருகின்றனர். இச்சம்பவத்தில் வவுனியா நெடுங்கேணி, சின்னடம்பன் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முத்துராசா விநாயகமூர்த்தி (வயது 54) என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (2-15-250)

# குடியிருப்புகளினுள் நுழையும் யானைகள் விவசாயப் பயிர்களை நாசப்படுத்துகின்றன

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சிவநகர், குறிசுட்டகுளம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து விவசாயப் பயிர்ச் செய்கைகளை நாசப்படுத்தி வருவதுடன், குடியிருக்கும் வீடுகளையும் சேதப்படுத்துவதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி கிராமங்களில் பகல் - இரவு வேளைகளில் நுழையும் யானைகள் அங்கு வசித்து வரும் பொதுமக்களை அச்சுறுத்தி வருவதுடன் தமது வாழ்வாதார விவசாயப் பயிர்களான பப்பாசி, வாழை, தென்னை போன்ற பயன் தரும் மரங்களை சேதப்படுத்தி வருவதால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிப் படைந்துள்ளதாக கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த பல மாதங்களாக காட்டு யானைகள் தமது பகுதிகளுக்குள் நுழைந்து வருவதாகவும், பிதான வீதியை தினசரி கடந்து செல்வது தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு, கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் இன்று வரையில் தமது பகுதிக்கு வரும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த மின்சார வேலிகளோ அல்லது மாற்று நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளார்கள்,

எனவே வவுனியா மாவட்டத்தின் துறைசார்ந்த அரச அதிகாரிகள் இதனைக் கட்டுப்படுத்த நடவடிகை மேற்கொண்டு உதவ வேணடும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)



யாழ்.புதிய சோனகத்தெரு முதியோர் சங்க ஜே/88 பிரிவு உறுப்பினர்களுக்கு கிளிநொச்சி மக்கள் பணியகத் தலைவர் மௌலவி சுபியான் அண்மையில் புதிய குடியிருப்பு இளையநிலா சனசமூக நிலையத்தில் வைத்து பேரீச்சம்பழப் பொதிகளை இலவசமாக வழங்கி வைத்தார்.

# வாழ்வாதார முன்னேற்றத்திற்கு தையல் இயந்திரம் வழங்கல்



கடந்த 2014•ஆம் ஆண்டு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் கொண்டுவரப்பட்ட கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக புனர்வாழ்வுபெற்ற போராளிகள், யுத்தத்தில் இறந்த போராளிகளது குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளது குடும்பங்கள் மற்றும் ஏனைய போராட்ட குழுக்களில் இருந்து இறந்தவர்களது குடும்பங்கள் ஆகியோரை வாழ்வாதாரத்தில் உயர்த்தும் நோக்கோடு ஆரம்பித்த குறித்த ஒவ்வொரு குடும்பத்திற்குமான தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உள்ளீடுகளை வழங்கும் உதவித்திட்டத்தினூடாக 2016 ஆம் ஆண்டு பயனாளிகளுக்கான திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் அனைத்து பயனாளிகளுக்குமான திட்டங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு அமைச்சரின் உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. (2-15)

## வடக்கு-கிழக்கை இணைக்கும் வீதி

# வடக்கு முதலமைச்சரின் கடிதத்திற்கு கிழக்கு முதலமைச்சர் பதிலளிக்கவில்லை

வடக்கு- கிழக்கை இணைக்கும் வீதியை திருத்துவது தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியிருந்த போதிலும் இதுவரை அவரிடம் இருந்து பதிலேதும் கிடைக்கவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 83 ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் கைதடியில் நடைபெற்றது. இதன் போது பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரனால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. இந்த பிரேரணை மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கணடவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய், தென்னமரவடி ஆகிய எல்லைக்கிராமங்கள் இணைக்கின்ற பதினாறு கிலோமீற்றர் நீளமான கமநல திணைக்களத்திற்கு உட்பட்ட வீதியும் பாலங்களும் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது. இந்த வீதியை மக்கள் தமது பிரதான தொழிலான விவசாயம் உட்பட பல்வேறுபட்ட அடிப்படை தேவைகளுக்காகவும் பயன்படுத்தி வருகினறனர். இரு மாவட்டத்தின் எல்லைகளில் வசித்து வருகின்ற உறவினர்கள் தமது உறவுகளை பேணுவதற்கான பிரதான போக்குவரத்து மார்க்கமாகவும் இப்பாதையே காணப்படுவதனாலும் இந்த வீதியினதும் பாலங்களினதும் புனரமைப்பு என்பது அவசியமாகின்றது.

எனவே இவ்வீதியையும் பாலங்களையும் திருத்தம் செய்வதன் ஊடாக மக்கள் போக்குவரத்தை இலகுபடுத்துவதுடன் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் போக்குவரத்து, இணைப்பும் உருவாகப்பட்டு மக்கள் மீள்குடியேற வழி செய்து போக்குவரத்து இணைப்பும் உருவாக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற வழி செய்து மக்களின் பூர்வீக நிலத் தொடர்புகளையும் உறவுகளையும் பாதுகாப்பதற்கான சிறந்த செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என கமநல திணைக்கள ஆணையாளரை இந்த சபை கோருகின்றது என தனது பிரேரணையை முன் மொழிந்தார்.

குறித்த பிரேரணையில் குறிப்பிட்டுள்ள பாலத்தை புனரமைக்கப்பட்டால் முப்பது குடும்பங்களே பயன்பெறுவார்கள். எனினும் கொக்குளாய் முகத்துவார பாலம் திருத்தப்படுவதன் மூலம் மூவாயிரம் குடும்பங்கள் பயன் பெறுவார்கள். எனவே கொக்குளாய் முகத்துவார பாலத்தை அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தவிர குறித்த பிரேரணை கொள்கை பிரச்சினை சார்ந்ததாக உள்ளது என உறுப்பினர்களான சிவநேசன் மற்றும் ரவிகரன் ஆகியோர் கூறினார்கள்.


எனினும் இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன், குறித்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்ததன் மூலமும், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் குறித்த வீதி தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையிலேயே மேற்படி பிரேரணை கொண்டு வரப்பட்டதாக கமலேஸவரன் கூறினார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், குறித்த வீதி அமைப்பதற்கு இந்தியா உதவி செய்வதாக கூறியிருந்தது. எனினும் வடக்கு கிழக்கு முதலமைச்சர்களின் ஒப்புதல்கள் தேவை என கூறியிருந்தனர்.

இதனை அடுத்து குறித்த வீதி மற்றும் பாலங்களை புனரமைப்பது தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுபபியிருந்தேன். எனினும் இது வரை அவரிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை எனக் கூறினார். இந்நிலையில் மேற்படி விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண மக்களின் கடிதம் எமக்கு கிடைக்கவில்லை என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி அதன் பின்னரே இது தொடர்பில் ஆராய முடியும் என தெரிவித்தனர். இதனையடுத்து மேற்படி விடயம் தொடர்பில் அடுத்த அமர்வில் முடிவு எடுப்பது என கூறப்பட்டு, சபையின் அடுத்த அமர்வுக்கு மேற்படி விடயம் ஒத்தி வைக்கப் பட்டது. (2-4)




## நிறைவு காண் மருத்துவ சேவை உத்தியோகத்தர் தங்கும் விடுதி திறப்பு





வவுனியா செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நிறைவு காண் மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் விடுதியை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு அமைச்சரின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 9 மில்லியன் ரூபாய் செலவில் விடுதி அமைக்கப் பட்டுள்ளது. அத்துடன் திண்மக்கழிவுகளை சேகரிக்கும் கழிவுக் கட்டடத்தொகுதியொன்றும் 1.2 மில்லியன் செலவில் அமைக்கப்பட்டு இதன் போது திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், மாவட்ட சுகாதார பணிப்பாளர் பசுபதிப்பிள்ளை பவானி, வைத்தியர் மகேந்திரன், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, செட்டிகுளம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யேசுதாஸன், செட்டிகுளம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கபிரியல் அந்தோனி , செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் சந்திரமோகன், செட்டிகுளம் மகா வித்தியாலய அதிபர் தர்மரட்னம் , கிராம அலுவர், வைத்தியர்கள், நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250-15)

# அதிக நிதியொதுக்கீட்டில் முல்லையில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன

## யாழ்.இந்திய துணைத் தூதுவர் தெரிவிப்பு



சுவிட்சர்லாந்து யோ. வனிதா எழுதிய "அன்னம்" கவிதைத் தொகுப்பு வெளியீடு கடந்த 28ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலின்முதற் பிரதியை வெளியிட்டு வைக்க வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் பெற்றுக் கொணடார்.

இதன்போது யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ. நடராஜன் உரையாற்றுகையில், இந்திய நாட்டின் உதவித்திட்டத்தில் எல்லா மாவட்டங்களையும் விட முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக நிதிஒதுக்கீட்டில் நிரந்தரமான அதிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அபிவிருத்திக்காக முல்லை மாவட்டத்திற்கு இந்திய நாட்டின் நிதி செலவிடப்படும் என தெரிவித்துள்ளார்.

இனியவாழ்வு இல்லத்தின் பார்வை இழந்த மாணவர்களினால் பாடல்களும் புலனற்ற மாணவர்களின் இசைநடனங்களும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281-15)

# மாற்றுத்திறனாளிப் பெண்கள் தமக்கென அமைப்பை உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்

## வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு

போரினால் பாதிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிப் பெண்கள் இலகுவில் வெளியில் வருவதில்லை. இந்நிலையில் தமக்கென ஓர் அமைப்பை உருவாக்கிச் செயற்படுவதற்காக மாற்றுத்திறனாளிப் பெண்கள் தாங்களாகவே முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும் என வவுனியா பிரதேச செயலாளர் கே.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்திற்கான மாற்றுத்திறனாளி மாதாகளின் நலனோம்பு அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் வடக்கு மாகாண மாற்றுத்திறனாளி மாதர்களின் நலனோம்பு அமைப்பின் இணைபபாளர் வே.சந்திரகலா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மாற்றுத்திறனாளி மாதர்களின் நலனோம்பு அமைப்பு என்ற பெயரிலான சுய உதவி அமைப்பு ஒன்று வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

எங்களது பிரதேசத்திலும் ஆயிரத்து 400 இற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் இருக்கின்றார்கள். ஆனால் 155 பேருக்குத்தான் மாதாந்தம் 3 ஆயிரம் ருபா கிடைக்கிறது. அரசாங்கத்தின் உதவத் திட்டங்கள் வந்தால் நாங்கள் தாராளமாகக் கொடுக்கலாம்.

நாங்களும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி அரசின் திட்டங்களில் பங்கெடுப்போம். அடுத்த ஐந்தாண்டுகளில், கணிசமான மாற்றங்கள் ஏற்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

கடந்த வருடம் அரசாங்கம் வழங்கிய வாழ்வாதார உதவிகளை மாற்றுத்திறனாளிகள், முன்னாள் போராளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரது குடும்பங்கள் என்பவற்றைக் கவனத்தில்கொண்டே வழங்கினோம்.

இதன் மூலம் 479 குடும்பங்கள் பயனடைந்திருக்கின்றன என்றார். (2-4)







மு/கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது...

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வெள்ளுள்ளி/வெள்ளை வெங்காயம்/வெள்ளைப்பூண்டு

Botanical Name: Allium satirum
English Name: Garlic
Sinhala Name: Suthu lunu
Family Name: Liliaceae

இது பருவகால குறுஞ் செடியாகும்.இது தரைக் கீழ்த் தண்டு குமிழ் (Bulb) வகையானது.1 மீற்றர் உயரம் வளரக்கூடியது.பசுமைத்தண்டு உருளை வளரக்கூடியது. பசுமைத்தண்டு, மலர்த்தண்டு என இரண்டு வகை காணப்படுகிறது.

மலர்த்தண்டுஸ்கேப் எனப்படுகிறது. குடை போன்றது.இது தரையடித் தண்டு மூலம் வளர்க்கப்படுகிறது. விதைகள் அரிதாக உருவாகின்றன.

**இனவிருத்தியும் பரம்பலும்**

வெள்ளைப்பூண்டின் தாயகம் மத்திய ஆசியா ஆகும். வடிகால் வசதியுள்ள களி மண் கலந்த அல்லது குறுமணல் கலந்த நிலம் பயிர்ச் செய்கைக்கு உகந்தது. குளிர்ச்சியான காலத்தில் வளரும் தன்மை கொண்டது. ஆனி, ஆடி அல்லது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நாட்டப்படுகின்றன. வெள்ளைப் பூண்டின் வயது 90-100 நாட்கள் ஆகும்.பயிர் முற்றியதன் அறிகுறியாக அதன் இலைகள் பசுமைஇழந்து காய்ந்து விடும்.

100 கிராம் உலர்ந்த பூண்டில் உள்ளசத்துகள் புரதம்-6.3g, கொழுப்பு-0.1g,நார்ப்பொருள்-0.8g, காபோவைதரேற்று-28.8g ,கல்சியம்-30g, பொஸ்பரஸ்-310g, இரும்பு-1.3g, தயமின்-0.06g, ரைபோ பிளேவின்-0.23 mg, நியாசின்-0.4 mg ,விற்றமின் C-6mg,சக்தி-140 மில்லி கலோரி.

**மருத்துவப் பண்புகள்**

இதன் குமிழில் பூண்டுப் பற்கள் எனும் (Cloves) பகுதிகள் உள்ளன. இவற்றை நசுக்கினால்நெடியானவாசனை வரும்.இதுவே இதன் மருத்துவப் பண்புகளின் அடிப்படையாகிறது.


நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் தயாரிப்பதற்கு ஆதிகாலத்தில் பூண்டு அனைத்து வகையான நோய்களுக்கும் மருந்தாக பயன்பட்டது.பூண்டு ரசம் உடல் வலியை போக்கும். தாய்மார்களுக்கு பால் சுரக்க உதவும் உடலுக்கு வலு உண்டாக்கும்.


நீண்ட ஆயுளைப் பெற விரும்புவோர் ஏதாவது ஒரு விதத்தில் பூண்டை தங்கள் உணவோடு அன்றாடம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சீதபேதிக்கு:- ஒரு பூடு உள்ளியை எடுத்து மேற்றோலை அகற்ற வேண்டும். கறியுப்பு சிறிது எடுத்து கொஞ்சமாக நீர் விட்டு பிசைந்து பின்பு அதை ஒரு பூண்டின் மீது கனமாகபூசிநெல்உமியில்வைத்து தீவைத்து அது கழன்று வரும் போது பூண்டை அதில் சொருகி சுட்டு எடுத்து தூசுகள் இல்லாமல் அசுற்றிஅம்மியில் வைத்து ஒன்றாக அரைத்து 5கிராம் அளவு தயிரில் அதிகாலை யில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இவ் வாறு 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட சீதபேதி தீரும்.

**புண் ஆறுவதற்கு**

வெள்ளைப்பூண்டு/வெள்ளுள்ளி,ஊமத்தம்வேர் ,வசம்பு ஆகிய மூன்றையும் எடுத்து 50கிராம் சமஅளவு எடுத்து ஒன்றாக நசுக்கி 500 மில்லி லீற்றர் நல்லெண்ணெயில் போட்டு அடுப்பிலிட்டு காய்ச்சி எண்ணெய் கொதித்து சிவக்கும் தருணத்தில் இறக்கி ஆற விட்டு கண்ணாடிப்புட்டியில் பத்திரப்படுத்தி ஆறாத புண்கள் மீது தொடர்ந்து தடவ புண்கள் ஆறும்.





உடல் சருமத்தில் சிறுசிறு சிவந்த கொப்புளங்களாக இருந்து நீர்வடிந்து,புண்ணாகி இருப்பதற்கு :-வெள்ளுள்ளி, வசம்பு,புங்கம்பூ, சீரகம், நன்னாரி வேர் ஆகிய 5 சரக்குகளிலும் ஒவ்வொன்றிலும் 30 கிராம் வீதம் எடுத்து பசும்பால் விட்டரைத்து சுத்தமான ஆமணக்கு எண்ணெய் 400 மில்லி லீற்றர் எடுத்து அரைத்து வைத்திருக்கும் சரக்கினை அதில் போட்டு கலக்கி அடுப்பிலிட்டு காய்ச்சும் போது மருந்து சரக்குகளின் சடசடப்பு ஓசை அடங்கும்.பின்பு சிறிது நேரம் கழித்து எண்ணெயை இறக்கி வடிகட்டி பத்திரப் படுத்தவும். வளர்ந்தோர் வேளைக்கு ஒரு தேக்கரண்டி எடுக்க வேண்டும். இதன் மூலம் மலம் இளகி வெளியேறும்.

விஷ வாத கரப்பானுக்கு அதாவது புண்கள் கொப்புளம் , நீர்வடிதல்,வீக்கம் காணப்படின் வெள்ளுள்ளியும் வசம்பும் 30 கிராம் எடுத்து வெங்காயம் 20 கிராம், பூவரசம்பூ, நெல்லி முள்ளி(உலர்ந்த நெல்லிக்கனி) ஆகியவற்றின் சாம்பால் ஒவ்வொன்றும் ஒரு கைப்பிடியளவு எடுத்து எல்லாவற்றையும் அம்மியிலிட்டு எடுத்து ஆடு தீண்டாப்பாளை சாறு விட்டரைத்து அரைத்த சரக்கை 400 மில்லிலீற்றர் ஒலிவ் எண்ணெயில் காய்ச்சி சட்டப்பு அடங்கி வரும் வரை விடவேண்டும். எண்ணெய் சிவந்து வர வடிகட்டி கண்ணாடிப் புட்டியில் அடைத்து தேவைக்கு பாவிக்க வேண்டும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**பாரிசவாயு, மூலவாயுவுக்கு**

தரமான வெள்ளுள்ளியை 50 கிராம் எடுத்து பசும்பால் விட்டரைத்து வேர்க்கொம்பு, மிளகு,திப்பிலி,சீரகம், பெருங்காயம்,ஓமம் இவை ஒவ் வொன்றும் 30 கிராம் சேர்த்து பொடித்து பசும்பாலில் சேர்த்தரைத்து பூண்டில் தூவி ஒன்றாக தணலில் வைத்து கடைந்து 5 கிராம் காலை, மாலை தொடர்ந்து 40 நாட்கள் கொடுக்க தீரும்.

இருதய நோய்கள், இரத்த அழுத்தம், கொலஸ்திரோல் என்பவற்றிற்கு

1kg வெள்ளுள்ளியை தோலை நீக்கி சிறிது சிறிதாக வெட்டி 1/4 போத்தல் தூய தேனில் 3 கிழமை ஊற விட்டு 3 கிழமை சென்ற பின்பு அதிகாலை வெறும் வயிற்றில் 1 தேக்கரண்டி தேனை ஊறிய உள்ளிப்பல்லுடன் உண்ண இவை நீங்கும்.


மறுப்பதுடல் நோய் மருந்தெலாகும்

மறுப்பதுள நோய் மருந்தெனச் சாலும்


மறுப்பதினி நோய் வராதிருக்க

மறுப்பது சாவையும் மருந்தெனவாகும்

மூலிகைகளே உணவாகவும் மருந்தாகவும் அமைந்து ஆரோக்கியத்தை பேண உதவுகிறது. உள்ளியானது ஓர் சமையலறை மூலி கையுமாகும்.














யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் ஏற்பாட்டில் கடந்த 27ஆம் திகதி தொடக்கம் கைதடியில் நடந்த தேசிய சுதேச மகாநாடும் கண்காட்சியின் இறுதி நாளான நேற்று மாணவர்கள் அதிகளவில் கண்காட்சியை பார்வையிட்டனர்.

# சீனாவின் கடன்பொறி

சீனாவிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் சிறிய நாடுகள் பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் அதேவேளையில், சீனா தனது சொந்த பூகோள கேந்திர நலன்களை மேலும் மேம்படுத்துவதற்காகவே தனது பொருளாதாரக் கருவிகளைப் பயன்படுத்தி வருகிறது.

சீனா தனது ஒரு றில்லியன் டொலர் பெறுமதியான 'ஒரு அணை ஒரு பாதை' என்ற திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக கேந்திர முக்கியத்துவ அமைவிடங்களில் அமைந்துள்ள நாடுகளின் பல்வேறு கட்டுமானத் திட்டங்களுக்கு தன்னாலான ஆதரவுகளை வழங்கி வருகிறது.

இதற்காக சீனாவால் இந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு பெருந்தொகையான நிதி கடனாக வழங்கப்படுகிறது. இதன் பெறுபேறாக, இந்த நாடுகள் சீனாவின் கடன் பொறிக்குள் அகப்பட்டுத் தவிப்பதுடன் இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததால் இந்த நாடுகள் சீனாவின் செல்வாக்கிற்கும் உட்பட்டுள்ளன.

கட்டுமானத் திட்டங்களுக்காக கடனை வழங்குவதென்பது மோசமான செயலல்ல. ஆனால் சீனாவினால் நிதி வழங்கப்படும் திட்டங்கள் எப்போதும் அந்தந்த நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் நிறைவேற்றப்படுவதில்லை என்பதே இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும்.

அத்துடன் இந்த நாடுகளின் இயற்கை வளங்களை சீனா பெற்றுக் கொள்வதுடன், சீனப் பொருட்களையும் இந்த நாடுகளில் விற்பனை செய்வதிலும் சீனா செல்வாக்குச் செலுத்துகிறது. அத்துடன் சீனா தனது நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களை இவ்வாறான சில திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றது.இதனால் உள்நாடுகளில் உள்ள மக்கள் தமக்கான வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

சீனாவிடமிருந்து கடன் பெற்று மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்களுக்குத் தற்போதும் மேலும் செலவு செய்யப்பட வேண்டிய நிலையும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 2013இல் அம்பாந்தோட்டைக்கு அருகில் திறக்கப்பட்ட இலங்கையின் மத்தல அனைத்துலக விமான நிலையமானது செயற்பாடற்று முடங்கியுள்ளது.

இதேபோன்றே அம்பாந்தோட்டை மாகம்புர மகிந்த ராஜபக்ஷ துறைமுகமும் எதிர்பார்த்தளவு செயற்திறனின்றிக் காணப்படுகிறது. பாகிஸ்தானில் பல பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குவடார் துறைமுகம் போன்றே அம்பாந்தோட்டைத் துறைமுகமும் வெறுமையாகக் காணப்படுகிறது.

எனினும் சீனா இவ்வாறான திட்டங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது. குறிப்பாக, சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் இரண்டு தடவைகள் இலங்கையின் துறைமுகங்களில் தரித்து நின்றுள்ளன. அத்துடன் அண்மையில் இரண்டு சீனப் போர்க்கப்பல்கள குவடார் துறைமுகப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளன.

தென் சீனக் கடலில் சீனாவானது தனது பிராந்திய உரிமையை விட்டுக் கொடுக்கக்கூடாது என்பதற்காக ஆசியான் அமைப்பின் நிலைப்பாட்டை எதிர்ப்பதற்காக கம்போடியா, லவோஸ், மியன்மார், தாய்லாந்து போன்ற நாடுகளை ஏற்கனவே தனது செல்வாக்கிற்குள் உட்படுத்தியுள்ளது. இதற்கும் மேலாக, சீனாவின் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத பல நாடுகள் தமது நாடுகளில்



சீனாவின் நிதியுதவில் மேற்கொண்ட திட்டங்களை மீண்டும் சீன அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களிடம் விற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளன.

நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாடுகளில் சீனா தனது பெரும்பான்மை உரிமையாண்மையை நிலைநிறுத்துவதற்குக் கோரிக்கை விடுத்து வருகிறது. எடுத்துக்காட்டாக, நேபாளத்தில் சீனாவிற்குச் சொந்தமான பிறிதொரு அணையை நிர்மாணிப்பதற்கு சீனா இந்த மாதம் உடன்படிக்கை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் 75 சதவீத உரிமையை சீன அரசிற்குச் சொந்தமான Three Gorges Corporation என்கின்ற நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது.

தன்னிடம் கடன்களைப் பெற்ற நாடுகள் அதிலிருந்து தப்பிச் செல்ல முடியாது என்பது உறுதிப்படுத்தும் விதமாக சீனா பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. அதாவது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையை மீள வரையறுப்பதற்காக மேலும் திட்டங்களை மேற்கொள்வதற்கு தன்னிடம் கடன் பெறுமாறும் அதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுமாறும் சீனா கோரிக்கை விடுத்து வருகிறது.

கடந்த ஒக்டோபரில், பாரிய புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக கம்போடியாவிற்கு வழங்கிய 90 மில்லியன் டொலர் பெறுமதியான கடனை சீனா தள்ளுபடி செய்தது.

அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட சில நாடுகள் சீனாவிடம் மீளவும் கடன்களைப் பெற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் மீள்பரிசீலனை செய்து வருகின்றன. இந்த நாடுகளைச் சேர்ந்த வேலைவாய்ப்பற்றவர்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக சீனாவின் பொருட்களை தமது நாடுகளில் விற்பனை செய்யக் கூடாது எனவும் இது உள்ளூர் உற்பத்திகளைப் பாதிப்பதாகவும் சீனா தனது நாட்டிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்யுமாறும் கோரி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நைஜீரியா தொடக்கம் இலங்கை வரையான சில நாடுகளின் புதிய அரசாங்கங்கள் தமது நாடுகளின் முன்னைய தலைமையால் சீனாவின் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல் குற்றங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன. பாகிஸ்தானுக்கான சீனாவுக்கான பதில் தூதுவரான சகோலிஜியன் கடந்த மாதம் தனது கீச்சக உரையாடலில் 'சீனாவின் திட்டங்களின் மீதான ஊழல்கள்' தொடர்பான குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை எனத் தெரிவித்திருந்தார்.

சீனாவிடமிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பல முன்வருவதற்கான காரணங்களைப் புரிந்து கொள்ள முடியும். நிறுவக சார் முதலீட்டாளர்களின் புறக்கணிப்புக்களே இதற்கான முக்கிய காரணியாகும்.

இதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது நாடுகளில் பாரிய கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்கு சீனாவின் உதவியை நாடுகின்றன. இவ்வாறு சீனாவின் உதவியை நாடும் பொருளாதாரம் நலிவுற்ற நாடுகளிடம் இலகு வட்டிக்குக் கடன் கொடுப்பதாக சீனா உறுதி வழங்குகிறது.

ஆனால் பின்னர் காலப் போக்கில் சீனா தனது வர்த்தக மற்றும் மூலோபாய நலன்களை அடையும் முகமாகவே கடன்களை வழங்குகின்றன என இந்த நாடுகள் உணர்ந்து கொள்கின்றன. இந்த நாடுகள் சீனாவின் கடன்பொறிக்குள் அகப்பட்டுத் தவிக்கின்றன என்பதை காலந்தாழ்த்தியே உணர்ந்து கொள்கின்றன.

இலங்கை என்பது சிறியதொரு தீவாகக் காணப்பட்டாலும் கூட, இது சீனாவின் கிழக்குத்துறைமுகங்களுக்கும் மெடிற்றறேனியனுக்கும் இடையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையானது சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தை அமுல்படுத்துவதில் முக்கியத்துவம் பெறுவதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்க் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஒன்பது ஆண்டுகால அதிகாரத்துவ ஆட்சியின் போது இலங்கையில் சீனா அதிகம் முதலீடு செய்ய ஆரம்பித்தது. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட போது மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக சீனா செயற்பட்டது.

இதன் பின்னர் சீனா இலங்கையின் பாரிய முதலீட்டாளராகவும் கடன் வழங்கும் நாடாகவும் மாறியது. இது இலங்கையின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகவும் மாறியது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ எதிர்பாராத தேர்தல் தோல்வியைச் சந்திக்கும் வரை சீனாவின் செல்வாக்கு இலங்கையில் விரிவடைந்தது. இதன் பின்னர் மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியானார். இவர் தனது தேர்தல் பரப்புரையின் போது சீனாவின் கடன் பிடிக்குள்ளிருந்து இலங்கையை மீட்டெடுப்பேன் என வாக்குறுதி வழங்கினார். ஆட்சிக்கு வந்த கையோடு சீனாவின் பாரிய திட்டங்கள் சிலவற்றை மைத்திரிபால சிறிசேன இடைநிறுத்தினார்.

ஆனாலும் சீனாவின் கடனைத் திருப்பிச் செலுத்தும் இடர்நிலைக்கு உட்பட்ட இலங்கை மீண்டும் சீனாவுடன் சமரசப் பேச்சுக்களை நடத்தியதுடன் இடைநிறுத்தி திட்டங்களில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து அத்திட்டங்கள் மீண்டும் தொடர்வதற்கான அனுமதியை வழங்க வேண்டிய நிலை புதிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதனால் இடைநிறுத்தப்பட்ட 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் போன்ற திட்டங்கள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டன.

1.1 பில்லியன் டொலர் பெறுமதிக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் 80 சதவீத உரிமையை சீனாவிற்கு வழங்குவதாக மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே உடன்பட்டுள்ளார். இலங்கைக்கான சீனாவின் தூதுவரான ஜி ஜியான்லியாங்க்கின் கூற்றின் பிரகாரம் தற்போது ஏனைய திட்டங்களின் உரிமையை சீனா இலங்கையிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

இலங்கை தனது நிதிப்பிரச்சினையிலிருந்து மீளெழுவதற்காக உதவுவதற்காகவே சீனா இதில் ஈடுபடுவதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில் சீனாவின் பொறிக்குள் இலங்கையைச் சிக்கவைத்து விட்டதாக, மைத்திரிபால சிறிசேன மீது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

சீனா தனது வெளிநாட்டு, பொருளாதார, பாதுகாப்புக் கோட்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்காக, பிற நாடுகளுடன் வர்த்தக, தொடர்பாடல், போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் தொடர்புகளை முன்னேற்றி வருகிறது. சீனாவிடமிருந்து கடன் பெற்ற நாடுகள் தமது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ள போது சீனா இந்த நாடுகளைத் தனது இலக்கை அடைந்து கொள்வதற்குப் பயன்படுத்துகிறது.

ஆகவே சீனாவின் கடன் பொறியானது நிச்சயமாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சீனாவின் கடன் பொறிக்குள் விழுந்து விடாது தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிறிய நாடுகள் எந்த நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டும்.

ஆங்கிலத்தில் – Brahma Chellaney
வழிமூலம் – My republica
மொழியாக்கம் - நித்தியபாரதி

# ஜல்லிக்கட்டு; போராட்டம், வன்முறை

# கைதான 36 மாணவர்களும் விடுவிப்பு

## தமிழக முதலமைச்சர் ஓ.பி.எஸ். அறிவிப்பு

**(டில்லி)**

**ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட 36 மாணவர்களும் வழக்கிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.**



தமிழக சட்டப்பேரவையில் நேற்று செவ்வாய்க்கிழமை விதி எண் 110ன் கீழ் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உரையாற்றினார்.

இதன்போது 'சென்னை மெரினா கடற்கரையில் இடம் பெற்ற ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்டதாகக் கூறி கைது செய்யப்பட்ட 36 மாணவர்களும் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

அதேவேளை, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு, பொலிஸ் தடியடி, வன்முறை தொடர்பாக விசாரணை நடத்தப்படும்.

அத்தோடு பொலிஸாரின் அத்துமீறல் இருந்ததா? என்பது குறித்தும் ஆணையம் 3 மாதத்துக்குள் விசாரணை நடத்தி விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படும்.

மேலும், வாகனங்கள் மற்றும் வீடுகளுக்கு தீ வைத்த பொலிஸார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அப்துல் கலாமுக்கு ஆலயம்

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமிற்கு திருச்சியில் கோயில் கட்டப்பட்டுள்ளது.



இந்தக் கோயிலானது 12 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, அங்கு அப்துல் கலாம் சிலை அமைக்கப்பட்டுள்ளது. சுமார் ரூ.ஒரு இலட்சம் செலவில் 3 மாதங்களில் இந்த கோவிலை புஷ்பராஜ் என்ற சமூக ஆர்வலர் கட்டியுள்ளார்.

இந்த சிறிய கோயிலில் கோபுரமும், கலசமும் வடிவமைத்து மக்கள் வணங்கி வருவதோடு, வெள்ளிக்கிழமை தோறும் மாலை அணிவித்து இந்து முறைப்படி தீபம் ஏற்றியும் வழிபாடுகளில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கலாமின் சிலைக்கு கீழே கறுப்பு வண்ண கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டு அதில், 'கலாம் 2020 கனவு காணுங்கள், ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னைத் தூங்கவிடாமல் பண்ணுவது எதுவோ அதுவே இலட்சியக் கனவு' என அப்துல் கலாம் கையொப்பமும் பொறிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, நமது தலைமுறையின் உயிர் நாடி தண்ணீர், மரம் நமக்கு கிடைத்த வரம் காப்பாற்றலாமே! என்ற கலாமின் வாக்கும் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 11 ஆவது ஜனாதிபதியாக இருந்தவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம். தமிழகத்தில் ராமேஸ்வரத்தில் பிறந்து, திருச்சி ஜோசப் கல்லூரியில் இயற்பியல் பட்டப்படிப்பும், சென்னை தொழில்நுட்பக் கல்லூரியில் விண்வெளி பொறியியல் படிப்பும் படித்தார்.

அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்பதற்கு முன்பு பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்திலும் பொறியாளராக பணியாற்றினார்.

'இந்திய ஏவுகணை நாயகன்' என்று புகழாரம் சூட்டப்பட்ட அவர் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றபோது திடீரென மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தமிழக அரசின் ஜல்லிக்கட்டு சட்டத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல்

(டில்லி)

ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் வகையில் தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.



ஜல்லிக்கட்டுக்காக தமிழக அரசு சார்பில் கொண்டு வரப்பட்ட அவசர சட்டத்தின் முன் வடிவு கடந்த ஜனவரி 23 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்ற சிறப்பு சட்டப் பேரவை கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் இந்த சட்ட முன்வடிவு அனைத்து கட்சிகளின் சம்மதத்துடன் ஒருமனதாக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து ஜல்லிக்கட்டு தொடர்பாக தமிழக அரசு கொண்டு வந்த இந்த சட்டமானது ஆளுநர் மூலமாக ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜல்லிக்கட்டை அனுமதிக்கும் தமிழக அரசின் சட்டத்திற்கு பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளார். இதனால் ஜல்லிக்கட்டு மீதான தடை தொடர்பான சிக்கல்கள் தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.

முன்னதாக தமிழக அரசின் அவசர சட்டத்துக்கு மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் ஒப்புதல் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அலங்காநல்லூர், பாலமேட்டில் மட்டும் தற்காலிகமாக ஜல்லிக்கட்டு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. முதல்வர் பன்னீர் செல்வத்துடன் கலந்து திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வரலாறு காணாத காட்டுத் தீயினால் கதிகலங்கும் சிலிக்கு உதவ தீயணைப்பு விமானங்கள் விரைவு

வரலாறு காணாத காட்டுத்தீயுடன் போராடிவரும் சிலிக்கு உதவி செய்வதற்காக ரஷ்யா மற்றும் பிரேசில் தீயணைப்பு விமானங்கள் சிலிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டை மீறி காட்டுத்தீ பரவியதை அடுத்து கடந்த வாரம் சிலி அரசு சர்வதேச அழைப்பு விடுத்தது.

அதற்கேற்ப பிரேசில் மற்றும் ரஷ்ய தீயணைப்பு விமானங்கள் சென்றுள்ளன. இந்த விமானங்கள் 12 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு உடையவை என்பதுடன் 46 மீற்றர் உயரத்திலிருந்து செயற்படுத்தும் திறன் உடையவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு மேலாக பரவலடையும் காட்டுத் தீயானது இதுவரை 4 இலட்சத்து 80 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பை சாம்பலாக்கியுள்ளது.




ஓரளவுக்கு தீயானது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் 110 இடங்களில் இன்னமும் தீயானது கொழுந்து விட்டு எரிவதாக தீயணைப்பு வீரர்கள் தெரிவிக்கின்றனர். இதுவரை 11 பேர் காட்டுத்தீயினால் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அகோரமாக இருக்கும் காட்டுத்தீ குறித்து கருத்து தெரிவித்த குடியிருப்பாளர் ஒருவர், 'மிகவும் பயங்கரமானது. அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது. தீயானது எங்கள் வீடுகளை நெருங்கிக்கொண்டிருக்கின்றது' என்று தெரிவித்துள்ளார்.

மற்றுமொரு குடியிருப்பாளர் தெரிவிக்கையில், ' இங்கு என்ன நடக்கப் போகின்றது என்பது தெரியவில்லை. கடவுள் மழையைத்தர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்' என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# அகதிகளுக்கு எதிரான நிலைப்பாடு அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக எதிர்ப்பு போராட்டங்கள் அதிகரிப்பு




அமெரிக்காவில் ஏழு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்து ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிரான போராட்டம் வலுத்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடந்த 27 ஆம் திகதி அதிரடியாக நிர்வாக ரீதியாக சில உத்தரவுகளை பிறப்பித்தார். அதன்படி சிரியா அகதிகள் மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை அமெரிக்காவில் நுழைய தடை விதிக்கப்பட்டது. இதேபோல் ஈரான், ஈராக், சிரியா, லிபியா, சூடான, ஏமன், சோமாலியா ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா வழங்குவது 3 மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கு எதிராக அமெரிக்காவில் கைதான 2 ஈராக்கியர்கள் சார்பில் நியூயோர்க் மாவட்ட நீதிமன்றில் அமெரிக்க சிவில் உரிமை யூனியன் என்ற அமைப்பு வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆன்டோனெலி, ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்தார்.

இதற்கிடையே இந்த தடை உத்தரவு முஸ்லிம்களுக்கு எதிரானது என்று அமெரிக்க ஊடகங்களில் தகவல் பரவியது. இதனால் அமெரிக்காவின் பல முக்கிய நகரங்களின் விமான நிலையங்களில் ட்ரம்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடந்து வருகின்றன.

நேற்று 4 ஆவது நாளாக நியூயோர்க், வோஷிங்டன், பாஸ்டன் நகர விமான நிலையங்களில் ட்ரம்ப்புக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். நியூயோர்க் நகரில் 10 ஆயிரம் பேர் அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

இதேபோல் வோஷிங்டன் நகரில் உள்ள லபயெட்டே சதுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு அகதிகளுக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பினர். பாஸ்டன், லொஸ்ஏஞ்சல்ஸ், ஹூஸ்டன் விமான நிலையங்களிலும் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் திரண்டு ட்ரம்புக்கு எதிராகவும், அகதிகளுக்கு ஆதரவாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ட்ரம்புக்கு எதிரான போராட்டம் அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் வலுத்து வருகிறது.

இந்த நிலையில் தனது உத்தரவு குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் விளக்கம் அளித்து ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ஒரு விடயத்தை தெள்ளத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். இந்த தடை நிச்சயமாக முஸ்லிம்களுக்கு எதிரானது அல்ல. ஊடகங்கள்தான் முஸ்லிம்களுக்கு எதிரான தடை என்று தவறாக தெரிவித்து உள்ளன. இது ஒரு மதம் சார்ந்த பிரச்சினை கிடையாது.

இது பயங்கரவாதத்துக்கு எதிராகவும், அமெரிக்க மக்களின் பாதுகாப்புக்காகவும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகும். உலகில் 40இறகும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் உள்ளன. இந்த நாடுகளில் வாழும் பெரும்பான்மையான முஸ்லிம்கள் யாரும் அமெரிக்க அரசின் உத்தரவால் பாதிக்கப்படவில்லை.

எங்களது நாட்டில் பாதுகாப்பு கொள்கைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன என்பதை அடுத்த 90 நாட்களில் ஆய்வு நடத்தி அதை உறுதி செய்து கொண்ட பிறகு எங்களுடைய நிர்வாகம் மீண்டும் விசாக்களை வழங்கும்.

சிரியாவில் மனித குலத்துக்கு ஏற்பட்டுள்ள கடும் நெருக்கடி குறித்து கவலை கொள்கிறோம். அதேநேரம், நாட்டு மக்களை பாதுகாத்து அவர்களுக்கு சேவை செய்ய வேண்டியதுதான் எங்களது அரசின் முதல் கடமை ஆகும். அதே நேரம் அரசின் உத்தரவால் பாதிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு உதவுவதற்கான வழிமுறைகளையும் காண்போம்.


எங்களது நாட்டில் குடியேறி இருக்கும் வெளிநாட்டவர்கள் குறித்து அமெரிக்கா பெருமைகொள்கிறது. அதே நேரம் நெருக்கடியால் வெளியேறியவர்களுக்கு (அகதிகள்) அமெரிக்கா தொடர்ந்து கருணை காட்டும் என்ற போதிலும் எங்களது குடிமக்களையும் எல்லைகளில் வசிப்போரையும் பாதுகாக்க நாங்கள் இதுபோல் செய்து தான் ஆகவேண்டும்.

ஏற்கனவே ஒபாமா அரசாங்கம் குறிப்பிட்ட நாடுகளின் பயங்கரவாதத்தால் அமெரிக்காவுக்கு ஆபத்து உருவாகலாம் என்று 7 நாடுகளை அடையாளம் கண்டு அதை பட்டியல்படுத்தி உள்ளது. அந்த 7 நாடுகளுக்குத்தான் இந்த தடையை பிறப்பித்து இருக்கிறோம என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# விண்வெளிப் பயணத்தின் போது மனிதனின் மரபணுவில் மாற்றம்

## நாசா கண்டுபிடிப்பு



மனிதர்கள் விண்வெளி பயணத்தின் போது உடலின் மரபணுவில் மாற்றம் ஏற்படுவதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மனிதர்கள் விண்வெளி ஆராய்ச்சிக்காகச் சென்று ஆராய்ச்சி முடிந்தவுடன் பூமிக்கு திரும்பும் போது அவர்களின் உடலில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்கிறதா? என்ற கேள்விக்கு பல வருடங்களாக பதில் கிடைக்காமல் உள்ளது.

இந்த நிலையில் விண்வெளிப் பயணங்களால் மனிதர்களின் மரபணு அளவில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா கூறியுள்ளது.

சுமார் ஒரு வருடத்துக்கு மேல் விண்வெளியில் செலவிட்ட அமெரிக்க விண்வெளி வீரர் ஸ்காட் கெல்லி மற்றும் அவருடன் பிறந்த இரட்டையரான மார்க் கெல்லி ஆகியோரிடம் நடத்திய ஆய்வின் முடிவில் நாசா இவ்வாறு தெரிவித்துள்ளது.

கடந்த 2015-16 ஆம் ஆண்டுகளில் ஸ்காட் கெல்லி, சுமார் 340 நாட்களை விணவெளியில் ஆராய்ச்சி காரணமாக பயணித்துள்ளார். இது பூமியில் அவரது வாழ்நாளில் 520 நாட்களுக்கு சமமானதாகும்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த நியூயோர்க்கின் வீல் கார்னர் பல்கலைக்கழக மரபணு ஆய்வுத்துறை தலைவர் கிறிஸ்டோபர் மேசன், விண்வெளிப் பயணம் காரணமாக ஸ்காட் மற்றும் அவரது சகோதரர் இடையிலான குரோமோசோம் அளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அதில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை கண்டறிந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். அதேபோல் டிஎன்ஏ செயற்பாட்டிலும் மாற்றம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஆனால், இதற்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று மேரிலேண்ட்டில் உள்ள ஜான்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக ஆய்வாளர் ஆண்ட்ரூ பீன்பெர்க் தெரிவித்தார். (இ-7)

# மருத்துவக் கல்லூரி மாணவி பிரபஞ்ச அழகியாகத் தேர்வு




(மணிலா)

பிரபஞ்ச அழகியாக பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஐரிஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

'மிஸ்யுனிவர்ஸ்' என்றழைக்கப்படும் பிரபஞ்ச அழகிப் போட்டி இந்த ஆண்டு பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடந்தது. இப்போட்டியில் 85 நாடுகளை சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். கடந்த சில நாட்களாக பல சுற்றுகளாக போட்டி நடைபெற்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இறுதிப் போட்டி நடந்தது.

அதில், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஐரிஷ் மிட்டனெரே (24) பிரபஞ்ச அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பிரான்சை சேர்ந்தவர். பல் மருத்துவக் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கிறார். கடந்த ஆண்டு பிரான்ஸ் அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருக்கு அடுத்த படியாக 2 ஆவது. இடம் கெய்தி நாட்டை சேர்ந்த ரகீல் பெலிசியருக்கு கிடைத்தது. கொலம்பியாவை சேர்ந்த ஆண்ட்ரியா தோவர் 3 ஆவது இடம் பெற்றார்.

பிரபஞ்ச அழகி பட்டம் வென்றுள்ள ஐரீஷ் போட்டியில் கேட்ட கேள்விக்கு, "அகதிகளுக்கு பிரான்ஸ் வரவேற்பு அளித்து எல்லைகளை திறந்து விட்டது. உலக மயமாக்கு தலை பிரான்ஸ் மக்களாகிய நாங்கள் விரும்புகிறோம். சர்வதேச நாடுகளை சேர்ந்த மக்களை நாங்கள் விரும்புகிறோம்" என பதில் அளித்தார்.

பிரபஞ்ச அழகி பட்டத்தை பல் மற்றும் வாய் நலம் பேணுதல் பிரசாரத்துக்கு பயன்படுத்த போவதாக கூறினார். இந்த அழகி போட்டியில் முதல் 13 இடங்களை இந்தோனேசியா, மெக்சிகோ, பெரு, பனாமா, கொலம்பியா, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த அழகிகள் பிடித்தனர். (இ-7)

# இருபது வருடங்களுக்கு பின் இளவரசி டயானாவுக்கு சிலை

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசி டயானா உயிரிழந்து 20 வருடங்கள் ஆன நிலையில், தற் போது அவரது சிலை நிறுவப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸை காதல் திருமணம செய்து கொண்டவர் டயானா. இவர்களுக்கு வில்லியம், ஹரி என இரண்டு பிள்ளைகள் உள்ளனர். சார்ள்ஸூடன் வாழ்ந்த போதே தான் வேறொருவரைக் காதலிப்பதாக அறிவித்தார் டயானா. இது இங்கிலாந்து அரச குடும்பத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இந்த அறிவிப்பால், டயானாவை விவாகரத்து செய்து விடும்படி சாரள்ஸை ராணி எலிசபெத் வற்புறுத்தினார்.

இளவரசர் சார்ள்ஸூடன் டயானா திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து டயானா பொதுவாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார். உலக அளவில் இவர்களது திருமண வாழ்வு தொடக்கம் முதல் மணமுறிவு ஏற்படும் வரையில் ஊடகங்களில் அதிகமாக பேசப்பட்டார்.



பாரிசில் 1997 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 இல் டயானா தனது காதலர் டோடி பயத்துடன் டன காரில் பயணம் செய்த போது, பத்திரிக்கையாளர்கள் புகைப்படம் எடுப்பதைத் தவிர்க்க வேகமாகச் சென்றபோது விபத்தில் சிக்கி பரிதாபமாகப் பலியானார்.

அவரது மரணம் குறித்து இன்னும் மர்மம் விலகாத நிலையில், தொடர்ந்து சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளி வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், இளவரசி டயானா உயிரிழந்து 20 வருடங்கள் ஆன நிலையில், தற்போது அவரது சிலை நிறுவப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டயானாவின் மகன்களான இளவரசர்கள் ஹரி மற்றும் வில்லியம் ஆகியோர் இந்த செய்தியை வெளியிட்டுள்ளனர். (இ-7)

# நவீன தொழில்நுட்ப உதவியுடன் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**தேசிய பாதுகாப்பினை உறுதி செய்ய நவீன தொழில்நுட்ப உதவியுடன் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போர் இடம்பெற்ற காலத்தில் கடற்படை, விமானப் படை, இராணுவம், பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படைப்பிரிவு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் உயிர்த் தியாகத்துடன் செய்த சேவை ஒருபோதும் மறக்கப்படக் கூடியதல்ல.

போரில் உயிர்நீத்த, உடல் பாகங்களை இழந்த அனைத்து படைவீரர்களுக்கும் நாட்டு மக்கள் என்றும் நன்றிக்கடனுடையவர்களாய் திகழ்வார்கள்.

தேசிய பாதுகாப்பு கடமைகளை உறுதி செய்வதற்கு நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் உன்னத பணியினை தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு படைவீரர்களுக்கு உண்டு என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய ஒற்றுமையை தொனிப்பொருளாகக்கொண்டு இலங்கையின் 69-வதுசுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு



தேசிய ஒற்றுமையை தொனிப்பொருளாகக் கொண்டு இம்முறை சுதந்திர தின நிகழ்வுக்ள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுதேச விவகார அமைச்சர் வஜிர அபேகுண வர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 4ஆம் திகதி காலிமுகத்திடலில் நாட்டின் 69ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதன்படி தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் நாட்டின் அநேக மாவட்டங்களில் சுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் உலகின் பல நாடுகளிலும் அமைந்துள்ள அந்தந்த நாடுகளுக்கான இலங்கைத் தூதரகங்கள் உயர்ஸ்தானிகராலயங்களிலும் சுதந்திர தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனைத்து அரச நிறுவனங்கள், திணைங்களங்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றிலும் தேசிய கொடியை காட்சிப்படுத்துமாறு சுற்றுநிருபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தின நிகழ்வுகளை பார்வையிட விரும்பும் மக்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு முன்னதாக லேக்ஹவுஸ் சுற்று வட்டத்தின் ஊடாக பழைய நாடாளுமன்றக் கட்டடம் வழியாக விழா நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய தேசிய ஒற்றுமையை தொனிப்பொருளாகக் கொண்டு இம்முறை சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு மத வழிபாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளதாக அமைச்சர் வஜிர அபேகுண வர்த்தன மேலும் தெரிவித்தார். (இ-7)

# நுகேகொடையில் பொலிஸார் சிறப்புச் சேவை

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த பாராட்டு

(கொழும்பு)

நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்திற்கு பொலிஸார் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கியதாக முனனாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக்கூட்டத்தின்பொழுது பொலிஸார் மிகவும் சுயாதீனமான முறையில் செயற்பட்டனர் என மகிந்த புகழாரம் சூட்டியுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளை விடவும் குறித்த கூட்டத்தின் போது பொலிஸார் சுயாதீனமான முறையில் செயற்பட்டதாகவும் அரசியல் அழுத்தங்களுக்கு அடி பணியவில்லை எனவும் அவர் பாராட்டியுள்ளார்.

பெருமளவிலான மக்கள் பங்கேற்ற கூட்டத்தின் போது பொலிஸார் உரிய முறையில் தமது கடமைகளை ஆற்றியிருந்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியது எனவும் மகிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதியமைச்சர் ரஞ்சனின் செயலால் ஜனாதிபதி மைத்திரி கவலை



திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரை பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பேசியமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை வெளியிட்டுள்ளார்.

அரச நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் ரஞ்சித் ஆரியரத்ன இதனை தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி கவலை வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தச்சம்பவம்தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க மன்னிப்புக் கோர வேண்டும் என தாம் கேட்டுக்கொள் வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த கட்ட கலந்துரையாடலை அரச நிர்வாக சேவைகள் அமைச்சருடன் மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி தம்மிடம் கேட்டுக் கொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நேர விடயத்தில் நெருப்பாக இருப்பது எப்படி?

நேரத்தைக் கடைப்பிடிப்பது என்பது ஒரு மகா உத்தமமான பழக்கம். பலர் ஏனோ இதன் அருமையை உணராமல் இருக்கிறார்கள்.

எதில் எதிலோ நேரத்தை வீணாக்கும் இவர்கள், பேருந்தைப் பிடிக்கும் போதும் ரயிலைப் பிடிக்கும் போதும் அவதிப்படுகிறார்கள். இரத்தக் கொதிப்பை அதிகமாக்கிக் கொள்வார்கள். எரிந்து விழுவார்கள். கடைசியில் ரயிலையோ பேருந்தையோ கோட்டைவிட்டு விடுவார்கள்.

இன்றைக்கு ஒரு பயணம் இருக்கிறது என்றால் நம்முடைய எல்லாச் செயல்களும் பயணத்தை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். அரட்டை அடிப்பதையும் அன்றையபத்திரிகையை ஒரு விளம்பரம் விடாமல் படிப்பதையும் தள்ளி வைத்து விட்டு ஊருக்குப் போவதற்கு ஆக வேண்டியதை உடனே செய்ய வேண்டும்.

சிலபேர் திருமணம் நடந்து முடிந்து வெகு நேரம் ஆன பின்புதான் திருமண வீட்டில் நுழைவார்கள். கேட்டால் 108 பொய்களைச் சொல்வார்கள். ஏனோதானோ எனக் கலந்து கொள்ளக் கூடிய திருமணங்களில் சரி மிக வேண்டியவர்களின் திருமணங்களில் இப்படி நடந்து கொள்வது நல்லுறவையே சிதைத்து விடுகிறது.

பலபேருக்கு நாம் குளித்து , சாப்பிட்டு , சீவி முடித்து சிங்காரித்துக் கிளம்ப எவ்வளவுநேரம் ஆகும் என்றே தெரிவதில்லை. சிலபேர் பத்து நிமிடத்தில் புறப்பட்டு விடுவார்கள். சிலரோ சீப்பு முனை தேயுமளவும் சீவிக் கொண்டிருப்பார்கள். குளிப்பதிலும் மோசம். நீர்யானை மாதிரி ஊறிக் கொண்டிருப்பார்கள்.

நேரக் கட்டாயம் ஏற்படும் போது அவசரமாகக் கிளம்பவும் தெரிந்திருக்க வேண்டும். நாம் தயாராக எவ்வளவு நேரம் ஆகும் என்ற நிதானம் தெரியாத எவரும் குறித்த நேரத்தைக் கடைப்பிடிக்க முடியாது.

பயண நேரம் எவ்வளவு, அந்த வாகனம் கிடைக்காவிட்டால் அல்லது பஞ்சர் ஆனால் எவ்வளவு நேரம் வீணாகும் என்றெல்லாம் கூடக் கணக்கிட வேண்டும்.

புறப்படும் போது எவரேனும் வந்துவிட்டால் நம் அவசரத்தை நாசூக்காக எடுத்துச் சொல்லி விட வேண்டியதுதான். இதற்கு ஓர் ஐந்து நிமிடம் ஒதுக்க இடம் வைத்துக் கொள்ள வேண்டும்.

வசதிக்குத்தக்கபடி கடிகாரம் கட்டலாம். 100 ரூபாய்க்குக் கடிகாரம் கிடைக்கும் காலம் இது. கடிகாரத்தைப் பத்து நிமிடம் கூடுதலாக வைத்துக் கொள்ள வேண்டும். இது நல்ல பலனைத் தரும்.

சிலபேர் இதை முடித்துவிட்டுப் புறப்படத் தயாராவோம் என்று எதையாவது குடைந்து கொண்டிருப்பார்கள். இது ஒரு தவறான பழக்கம். புறப்படத் தயாராகிவிட்டு நேரம் இருந்தால் மட்டுமே பிற வேலைகளைக் கவனிக்க வேண்டும். குறித்த நேரத்தைக் கடைப்பிடிப்பது என்பது பலர் நினைப்பது போல் ஒரு சாதாரண பழக்கம் அல்ல. அது பல நல்ல பண்புகளின் கூட்டுக் கலவை.


அது நாம் நம் கடமைகளை உணர்ந்திருக்கிறோம் என்பதை உலகுக்கு உணர்த்துவது. நம் பொறுப்புணர்வைப் பிறருக்குச் சுட்டிக் காட்டுவது. நாம் மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கிறோம் என்பதைச் சொல்லாமல் சொல்லுவது இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்!

**லேனா தமிழ்வாணன்**


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1


♦1ஆம் 2ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1. 

2. 

♦ 3ஆம் 4ஆம் வினாவின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

3. 


4. 

5.வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

888 + [ ] + [8+] 8 [+] 8 [=] 1000

1)22 2)44 3) 88


♦6ஆம் 7ஆம் வினாக்களுக்கு பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.




6.  எதற்குச்சமம்?

1. 100ml 2. 1200ml 3. 2000ml

7.பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?



8. 1 இற்கும் 20இற்கும் இடையிலுள்ள இரட்டையெண்களின் எண்ணிக்கை யாது?

1) 9 2) 10 3) 11

9. பேருந்தொன்றில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும்.அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 8 2) 12 3) 32

10. ஒரு செவ்வகத்தின் பரப்பளவு 36 $cm^2$ ஆகும். அதேயளவு பரப்பளவைக் கொண்ட சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளம் யாது?

1) 9 cm 2) 6 cm 3) 4cm

11. மிகச் சரியான வாக்கியத்தின் கீழ்க்கோடிடுக.

1. மாணவர்கள் நன்றாகப் படித்தால் எல்லோரும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெறமுடியும்.


2. மாணவர்கள் பாடசலைக்கு வராமல் வீட்டில் நின்று படித்தால் பரீட்சையில் சித்தியெய்த முடியும்.

3.மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று படித்தால் எழுபது புள்ளிகளுக்கு மேல் பெறமுடியும்.


12. ஆறு மனிதர்கள் ஒரு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பர். மேலும் இரண்டு மனிதர்கள் சேர்ந்தால் எத்தனை நாட்களில் அவ்வேலையைச் செய்து முடிப்பர்.

1) 3 2) 6 3) 2


13. தரப்பட்டுள்ள வடிவத்தைக்கொண்டு ஒரு சதுரமுகியை அமைக்கும் பொழுது அது தோன்றும் விதம்?



14.கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்தை நிரப்புக.



1) 6 2) 5 3) 10


15. 

1) 200 2) 115 3) 125

16. சிறப்பு அங்காடி ஒன்றின் விற்பனைக் கண்காட்சி ஒரு புதன்கிழமை ஆரம்பித்தது. அது எட்டு நாட்களாக நடைபெற்றது எனின் முடிவடைந்த நாள் எது?

1) வியாழன் 2) புதன் 3) செவ்வாய்

♦பின்வரும் தொடர்புகளில் ஒவ்வோர் உருவிற்கும் ஒரு பெறுமானம் உண்டு. அதற்கேற்ப 17 ஆம் 18 ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.





17. இன் பெறுமானம் யாது?

1) 8 2) 11 3) 9

18. இன் பெறுமானம் யாது?

1) 3 2) 9 3) 18

19. A பிள்ளைகள், B ஆண்பிள்ளைகள் C பெண் பிள்ளைகள் இதனைக் குறித்துக் காட்டும் கீழுள்ள வரிப்படம் எது?



20. சதுர வடிவமான மைதானம் ஒன்றின் நான்கு மூலைகளிலும் A,B,C,D என்ற நான்கு சிறுவர்கள் முறையே நிற்கின்றனர். Aஇற்கு C வாயு மூலையில் நிற்பதாகத் தெரிகிறது. C இற்கு Dகிழக்குத் திசையில் நிற்பதாகத் தெரிகிறது. இதற்கேற்ப B இற்கு D நிற்பதாகத் தெரியும் திசை எது?

1) வடக்கு 2) வடமேற்கு 3) வடகிழக்கு

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 1

21. A,B,C எனும் மூன்று பேர் தம்மிடமிருந்த டொபிகளை பங்கிட்டுக்கொண்டனர். Aயும் Bயும் பெற்றது Bயும்Cயும் பெற்றதிலும் குறைவு. Bயும்Cயும் பெற்றது Aயும்Cயும் பெற்றதிலும் குறைவு. மூவரில் அதிக டொபிகள் பெற்றவர் யார்.

1) A 2) B 3) C

22. A,B,C,D,E ஆகியோர் வரிசையாக நிற்கின்றனர். Cஇற்குப் பின்னால் B நிற்கின்றார். C இற்கு முன்னால் Dநிற்கின்றார். E இற்குப்பின்னால் Aயும் A இற்குப்பின்னால் Dயும் நிற்கின்றனர். நடுவில் நிற்பவர் யார்?

1) C 2) D 3) A

23 ஆம் 24 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

23. கோழி மிதித்துக் குஞ்சு சாகாது.



1) சிறு குற்றமுந் தவிர் 2) வீண் தூற்றுதல் 3) அன்புக் கண்டனம் அழிக்காது

24. சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்


1) பயிற்சியின் பயன்
2) உழைத்து உழைத்து உண்
3) கூடிய முயற்சியின் குறைந்த பயன்

சோடிச்சொற்களுக்கு மிகப்பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

25.மென்மை-சுவை



1) 
2) 
3) 

26. நிழல்- தூய காற்று



1) 
2) 
3) 

குறைந்த தொடர்புள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

27.

1) 
2) 
3) 

28.

1) 
2) 
3) 


29. 6 லீற்றர் பாத்திரத்தில் 2/3 பங்கு நீர் உள்ளது. 4 லீற்றர் பாத்திரத்தில் 1/2 பங்கு நீர் உள்ளது. இரு பாத்திரங்களில் உள்ள நீரும் ஒரு பானைக்குள் ஊற்றப்பட்டால் மொத்த நீரின் அளவு,

1) 2 லீற்றர் 2) 4 லீற்றர் 3) 6 லீற்றர்

30. வடக்குத் திசைக்கும் கிழக்குத் திசைக்கும் இடையில் அமைகின்ற கோணம்,

1) செங்கோணத்திற்குச் சமம்
2) செங்கோணத்திலும் குறைவு
3) செங்கோணத்திலும் கூட

31. இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கையாது?



1) 10
2) 11
3) 12

32. மஞ்சள், சிவப்பு, நீலம், பச்சை என்ற ஒழுங்கில் ஆலயத் திருவிழாவில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன. 50 ஆவது மின்குமிழின் நிறம் யாது?

1) சிவப்பு 2) மஞ்சள் 3) நீலம்

33. அமலன் கமலனைவிட நிறை குறைந்தவன். விமலன் கமலனைவிட நிறை கூடியவன். நிமலன் விமலனைவிட நிறைகூடியவன். இவர்களில் நிறை குறைந்தவர் யார்?

1) அமலன் 2) விமலன் 3) நிமலன்

34. 100 மீற்றர் நீளமான வேலி ஒன்றில் சம இடைவெளியில் 11 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அதே இடைவெளியில் 200 மீற்றர் நீளமான வேலிக்குத் தேவையான கம்பங்கள் எத்தனை?

1)22 2) 20 3) 21


35. ஒரு சதுரமுகியின் ஒரு பக்கத்தின் பரப்பளவு 49 சதுர சென்ரிமீற்றர் ஆகும். அதன் விளிம்புகளின் கூட்டுத்தொகையாது.

1) 52 சென்ரிமீற்றர் 2) 84 சென்ரிமீற்றர் 3)22 சென்ரிமீற்றர்

36. ஒரு கிலோகிராம் 200 கிராம் தேயிலையின் விலை 300.00 ரூபாய் எனின் 100 கிராம் தேயிலையின் விலையாது?

1) ரூபாய் 30.00 2) ரூபாய் 25.00 3) ரூபாய் 20.00

37.




எண்கோலத்தை அவதானித்து வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் யாது?

1) 134
2) 51
3) 102

38. தொண்ணூற்றொன்பதாயிரத்து தொளாயிரத்து ஒன்பது என்ற எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் பொழுது கிடைக்கும் எண்

1) 100 000 2) 99 910 3) 99 900

39. ரவி வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 25 கிலோமீற்றர் ஆகும். 2/5 இனை பேருந்திலும் மீதியின் 1/3 பங்கை உந்துருளியிலும் மீதித் தூரத்தை நடந்தும் சென்றான். நடந்து சென்ற தூரம் யாது?

1) 10 கிலோமீற்றர் 2) 15 கிலோமீற்றர் 3) 20 கிலோமீற்றர்

40. கதிர் 5 மீற்றர் துணியை சமமான 20 துண்டுகளாக வெட்டினான். டனி 7 மீற்றர் துணியை கதிர் வெட்டிய அளவு நீளத்திலும் 5 சென்ரிமீற்றர் குறைவான நீளத்தில் வெட்டினான் எனில், டனி வெட்டிய துண்டுகள் எத்தனை?

1) 30 2) 35 3) 36

# இந்தியாவிற்கு எதிராக இலங்கை செயற்படாது

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்தியாவிற்கும் அதன் தலைமைகளுக்கும் எதிராக கடல் மற்றும் தரை மார்க்கமாக இலங்கை அரசு ஒருபோதும் செயற்படாதென தெரிவித்துள்ள இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆர்.சி.விஜேகுணரட்ன, இரு நாடுகளுக்குமிடையிலான கடற்படை உறவுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.**



இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கடற்படைத் தளபதிக்கும் இந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சுனில் லங்பாவிற்கும் இடையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போது இலங்கை கடற்படை தளபதி மேற்குறித்த கருத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இறைமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் இலங்கை எந்த விதத்திலும் செயற்படாதென தெரிவித்த கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆர்.சி.விஜேகுணரட்ன, பொருளாதார நோக்கத்திற்காகவே இலங்கையில் சீனா காலூன்றியுள்ளதெனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இந்திய கடற்படை தளபதி, மடிவலை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடி முறையினை நிறுத்தி அதற்கு மாற்றீடான முறையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவித்தார்.

அத்துடன் ஆழ்கடல் மீன்பிடியினை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களால் உள்நாட்டு மீன்வளம் பாதிக்கப்படுவதோடு, இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் நசுக்கப்படுகின்றதென இலங்கை தரப்பும், இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டு வருவதாக இந்திய தரப்பும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் நிலையில், இச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் கடற்படைத்தளபதியிடம் விசாரணை



(கொழும்பு)

ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் குறித்து கடற்படைத் தளபதி வைஸ்ட் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்னவிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நடைபெற்ற ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பல் ஒன்றை விடுவிப்பது தொடர்பில் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணவர்த்தன நேரடியாக தலையிட்டிருந்தார்.

இதன்போது அங்கு செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் மீது கடற்படைத் தளபதி நேரடித்தாக்குதல்மேற்கொண்டதாக ஊடக செய்திகள் தெரிவித்திருந்தன. எனினும் கடற்படைத் தளபதி குறித்த குற்றச்சாட்டை மறுத்திருந்தார்.

இதற்கிடையே தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும்மனித உரிமை ஆணைக்குழு, தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறப்படும் ஊடகவியலாளரிடமும் வாக்கு மூலம் ஒன்றை பதிவு செய்துள்ளது.

இதேவேளை, தொலைக்காட்சி, வீடியோ காட்சிகள், புகைப்படங்கள் போன்றனவும் விசாரணைகளுக்கான ஆதாரங்களாக பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், விசாரணைகளின் முதற்கட்டமாக, சம்பவம் குறித்து விளக்கம் கோரி கடற்படைத் தளபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 974

Search for people, places and things Nagendram Home


தேவா




மது




சிறி



கனி




கண்ணா




புவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லாட்சியின் காட்சிகள் எனக்கு நன்றாகத் தெரியும்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



இந்த நல்லாட்சியின் கட்சிகளை எனக்கு மிக நன்றாக தெரியும். இந்த அரசியலிருந்து, எப்போது உள்ளே வர, எப்போது வெளியே போக வேண்டும், எப்போது அதிர்ச்சி கொடுக்க வேண்டும், எப்போது சிரிக்க, முறைக்க வேண்டும் என்பவை எனக்கு மிக நன்றாக தெரியும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபை உறுப்பினர் மயூரன் தனியார் தொலைக்காட்சியொன்றின் செய்தியறிக்கையின் போது நடராஜா ரவிராஜின் வழக்கு தீர்ப்பின் காரணமாக அமைச்சர் மனோ கணேசனை அரசாங்கத்திலிருந்து வெளியேறும்படி கூறியுள்ளதாக தெரிவித்தார்.

வடமாகாணசபை உறுப்பினர் கூறியதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் தெரிவிக்கையில்,

ரவிராஜின் வழக்கு தீர்ப்பு தொடர்பில் நான் ஏற்கனவே என் கடும் அதிருப்தி நிலைப்பாட்டை பகிரங்கமாக கூறியுள்ளேன். ஆனால், அரசில் இருந்து வெளியேற இந்த ஒரு காரணம் மட்டும் போதுமானதல்ல.

நாட்டின் அனைத்து பிரச்சினைகளையும் வடகிழக்கின் கட்சி அரசியல் பயணத்துடன் மாத்திரம் கொண்டு சென்று முடிச்சு போட வேண்டாம் என்பதையும், இந்நாட்டில் தமிழ் மக்கள் நாடு முழுக்க வாழ்கிறார்கள் என்பதையும், இது ஒரு நாடு என்பதையும் நாம் அனைவரும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதையும் இந்த இளைஞருக்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

குறுகிய குறுநில பார்வைகள் தமிழ் மக்கள் பெருந்திரளின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை ஒருபோதும் பெற்றுத் தராது.

இந்த நல்லாட்சி தொடர்பாக எத்தனை முரண்பாடுகள் இன்று இருந்தாலும், அது இந்த அரசை உடைத்தெறிந்து மீண்டும், மகிந்த ராஜபக்ஷ வர இடம் ஏற்படுத்துவதை நியாயப்படுத்தாது.

இதை சர்வதேசமும் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. சர்வதேச சமூகத்தின் நாடித் துடிப்பு எனக்கு மிக நன்றாகவே தெரியும். சர்வதேசத்தின் அதிருப்தியையும் சம்பாதித்துக்கொண்டு, இருக்கின்ற ஒரேயொரு கொலுக்கொம்பையும் இழக்க நான் தயாரில்லை.

இந்த வடமாகாணசபை உறுப்பினரை எனக்கு தெரியாவிட்டாலும், அவர் அங்கம் வகிக்கும் மாகாணசபையையும், அதன் முதல்வரையும் எனக்கு நன்கு தெரியும்.

பல்லாண்டுகளுக்கு முன் அந்த மாகாணசபை தேர்தலின் போது வடக்கு வந்து முகாமிட்டு, தங்கியிருந்து, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு, வடமாகாணசபை உருவாக்கத்தில் பங்களித்தவன் நான்.

என் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய சொல்லும் இவர்களிடம், தம் ஒட்டு மொத்த எதிர்ப்பை எடுத்துக் காட்டும் முகமாக முதலில் தமது வடமாகாணசபையையும் ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்யுங்கள் என நான் சொல்லப்போவதில்லை.

இவரது கட்சியான தமிழரசு கட்சியின் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களையும், இலங்கை பாராளுமன்றத்தில் இருந்து ஒட்டு மொத்தமாக இராஜினாமா செய்யுங்கள் என நான் சொல்லப் போவதில்லை.

இலங்கை பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் பதவியையும், கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனது எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் இராஜினாமா செய்யும்படி கூட நான் சொல்லப் போவதில்லை.

எடுத்தேன், கவிழ்த்தேன் என அரசியல் செய்யாமல் முதிர்ச்சியுடன் பயணியுங்கள். ஜனரஞ்சகமானது எனக்கருதி, உணர்ச்சிவசப்பட்டு கருத்துகளை கூறாதீர்கள்.

அவசரப்பட்டு முடிவுகளை எடுத்து தொலைக்காதீர்கள். வரலாற்றிலிருந்து பாடம் படியுங்கள். இன்று எம்மிடம் எஞ்சியுள்ளது என்ன என்பதை பற்றிய சரியான, நேர்மையான கணக்கெடுப்பை செய்யுங்கள் என அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

மேலும் உரிய வேளையில், உரிய முடிவுகளை, உரிய முறைகளில் கூட்டாகவே நாம் எடுப்போம். அதற்கான காலம் வரும் என அமைச்சர் மனோ கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மிகப்பெரிய விமான சேவை ஆரம்பம்






(கொழும்பு)

கொழும்பு மற்றும் பஹ்ரைனிற்கு (Bahrain) இடையில் குல்ப் எயார் (Gulf air) நிறுவனமானது தனது நேரடி விமான சேவையினை ஆரம்பித்து வைத்துள்ளது.

இலங்கையில் காணப்படும் முக்கியமான சுற்றுலாத் தளங்களில் கொழும்பு நகரும் ஒன்றாகும். அந்தவகையில் ஒருவாரத்திற்கு ஐந்து தடவைகள் இந்த நேரடிச் சேவை பஹ்ரைன் - கொழும்புக்கிடையில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மிகப்பெரிய விமான சேவை நிறுவனங்களில் குல்ப் எயார் விமான சேவையும் உலகில் பத்திற்கும் மேற்பட்ட பிராந்தியங்களில் சேவையினை தொடர்ந்து வருகின்றது.

தற்போது மூன்று கண்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள குறித்த விமான நிறுவனமானது 24 நாடுகளில் உள்ள 41 நகரங்களுக்கு தனது சேவையை வழங்கி வருகின்றது .

இவ்வாறு கொழும்பிற்கு வந்து தரித்து நின்று பயணங்களை மேற்கொள்ளும் குறித்த சேவையானது மத்திய கிழக்கு நாடுகளை தாண்டி ஐரோப்பிய நாட்டு நகரங்களிலும் சேவையினை வழங்குவது இலங்கையர்களுக்கு மிகவும் இலகுவாக அமையக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 11 கோடி ரூபா கடத்த முயன்றவருக்கு ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதிப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 11 கோடி ரூபா பெறுமதியான பணத்தைக் கடத்திச் செல்ல முயன்ற நபருக்கு ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி இலங்கையிலிருந்து டுபாய் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வருகை தந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்து சட்ட விரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட இருந்த 11 கோடி ரூபா பெறுமதியான இலங்கை மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்கள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து சம்பவம் தொடர்பில் பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுத்த சுங்கப் பிரிவினர், கைப்பற்றப்பட்ட பணத்தை அரசாங்கத்தின் கருவூலத்தில் சேர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அத்துடன் கடத்தலில் தொடர்புடைய நபருக்கு நேற்று முன்தினம் ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆலோசகர்இலங்கை விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஆலோசகர் குழுவின் உறுப்பினரான சலாப் குமார் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்துவை சந்திக்கவே இவர், இலங்கை வருவதாக கூறப்படுகின்றது.



இதேவேளை, அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி, இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-3)

## அமைச்சர் சஜித் பிரேமதாச ஒரு முன்மாதிரியான அமைச்சர்

### அமைச்சர் தலதா அத்துகோரள புகழாரம்



அரசாங்கத்தின் சம்பளம், வாகனம் உள்ளிட்ட எந்த வசதிகளையும் பெற்றுக் கொள்ளாத சஜித் பிரேமதாச ஒரு முன்மாதிரியான அரசியல் வாதிஎன்று தலதா அத்துகோரள புகழாரம் சூட்டியுள்ளார்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் இரத்தினபுரி பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள 33 வீடுகள் கொண்ட வீடமைப்புத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் தலதா அத்துகோரள மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர்கள் என்றாலும் எங்களுக்கும் தனிப்பட்ட செலவுகள் இருக்கின்றது. போக்குவரத்துக்கு வாகனங்கள் தேவையாக உள்ளன.

அந்த வகையில் அரசாங்கத்தின் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, அரசாங்க வாகனத்தைப்பயன்படுத்தியே நாங்கள் மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ளோம். ஆனால் அமைச்சர் சஜித் பிரேமதாச அரசாங்கத்தின் சம்பளம் மற்றும் வாகனம் உள்ளிட்ட எந்தவொரு வசதியையும் பெற்றுக் கொள்ளாத ஒரே அமைச்சராக , முன்மாதிரி அரசியல்வாதியாக இருக்கின்றார்.

அந்தவகையில் நாட்டுக்கும், பொதுமக்களுக்கும் எந்த வகையிலும் கடன் இல்லாத ஒருவராக அமைச்சர் சஜித் பிரேமதாசவை அடையாளப்படுத்தலாம்.

இதற்கு முன்னரும் ஒரு வீடமைப்பு அமைச்சர் இருந்தார். அவர் தனது தனிப்பட்ட தேவைகளுக்காக நூறுக்கும் அதிகமான வாகனங்களை



பயன்படுத்தி இருந்தார்.

அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்திருந்தார். அதன் பலனாக இன்று சிறையில் இருந்து கொண்டிருக்கின்றார்.

பெரும்பாலான அரசியல் வாதிகள் இவ்வாறுதான் அரசியலில் வளரும் வரை சோசலிசம் பேசுவார்கள்.

ஆனால் ஓரளவுக்கு வளர்ந்தவுடன் கொள்ளையடித்து தங்களை வளர்த்துக் கொள்வார்கள். அவ்வாறானவர்களுக்கு அமைச்சர் சஜித் பிரேமதாச மிகச் சிறந்த முன்மாதிரியாவார் என்றும் அமைச்சர் தலதா அத்துகோரள மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஹேலீஸ் 'ஜீவாதார' திட்டம் ஒரு மில். முருங்கை மரக்கன்றுகள் மூலமாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தையும் போசணையையும் மேம்படுத்தல்







முன்னணி பல்தேசிய குழுமமான ஹேலீஸ் பீ.எல்.சீ.உடைய விவசாயப் பிரிவான 'ஹேலீஸ் அக்ரிகல்சர்' (Hayleys Agriculture) நீடித்து நிலைக்கக்கூடிய விவசாய வளர்ச்சி மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தையும் ஊட்டச்சத்தையும் மேம்படுத்தும் பொருட்டு 'ஜீவாதார' என்ற நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக யாழ்ப்பாணத்திலும், வடமாகாணத்தின் அண்மைய பிரதேசங்களிலும் ஒரு மில்லியன் முருங்கை மரக்கன்றுகளை நடுவதற்காக ஒரு வலையமைப்பின் ஊடாக 100,000 விவசாயிகளுக்கு உதவிகளை வழங்கவுள்ளது. விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக உள்நாட்டு நுகர்வு மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்வதே 'ஜீவாதார' திட்டத்தின் நோக்கமாகும். அந்தவகையில் ஒரு வீட்டுக்கு 10 கன்றுகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த 100,000 வீடுகளுக்கு முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில், கைதடி நாவற்குழி மகா வித்தியாலயத்தில், பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் 1000 விவசாயிகளுக்கு 10,000 முருங்கை மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

பலவிதமான அதன் ஊட்டச்சத்து பண்புகள் காரணமாக மனித இனத்திற்கு இயற்கையின் கொடையாகக் கருதப்படும் முருங்கை, பாரம்பரியமாக இலங்கையின் வடக்குப் பகுதியில், சிறியளவில் பல நூற்றாண்டு காலமாக வளர்க்கப்பட்டு வரும் நிலையில், அதன் காய்கள் மற்றும் இலைகள் என்பன பயன்மிக்க ஊட்டச்சத்து உணவுகளாக இருப்பதால் 'சுப்பர் உணவு' என வகைப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியாக அற்புதமான மரமாக கருதப்படுகிறது. முருங்கையின் ஒவ்வொரு கிராமிலும், தயிரின் இரண்டு மடங்கு புரதமும், பாலின் நான்கு மடங்கு கல்சியமும், கீரையின் 25 மடங்கு இரும்புச் சத்தும், கரட்டின் நான்கு மடங்கு விற்றமின் A யும், தோடம் பழத்தின் ஏழு மடங்கு விற்றமின் C யும் காணப்படுகிறது.

முதிர்ந்த 10 முருங்கை மரங்கள் மூலமாக, விவசாயி ஒருவர் வருடத்திற்கு 50,000 ரூபா வரை மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று 'ஹேலீஸ் அக்ரிகல்சர்' நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும் இலைகள் முதல் காய்கள் வரை மரத்தின் ஒவ்வொரு பகுதிகள் மூலமாகவும் வருமானத்தை ஈட்டிக கொள்ள முடியும். முருங்கை இலைத்தூள் முதல் காய்களிலிருந்து பெறப்படும் சமையல் எண்ணெய் வரை அதன் எண்ணற்ற பயன்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளால் கண்டறியப்பட்டுள்ள அதன் மகத்தான ஊட்டச்சத்துகள் மற்றும் ஆரோக்கிய நலன்கள் காரணமாக புகழ்பெற்ற தாவரமாகவும் முருங்கைமரம் விளங்குகிறது.

ஹேலீஸ்தலைவர்மொஹான் பண்டிதகே, "உள்ளூர் சமூகத்தின் வாழ்க்கையையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கான தொடர்ச்சியான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் குழுவின் தத்துவத்தை எடுத்துக்காட்டுவதாக ஜீவாதார திட்டம் விளங்குகிறது" எனத் தெரிவித்தார்.

"வடக்கின் சாதகமான விவசாய சூழலியல் நிலைமைகள் காரணமாகவே, முருங்கை மர செய்கைக்கான இந்த ஜீவாதார திட்டம் அங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது" என்று கூறிய ஹேலீஸ் அக்ரிகல்சர் ஹோல்டிங்ஸின் முகாமைத்துவ பணிப்பாளர் ரிஸ்விசஹீட், "எனவே தான் யாழ்ப்பாண குடாநாட்டை சூழவுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு இயற்கையோடு இணைந்த இந்த பயிர்ச் செய்கையானது வணிக ரீதியாகவும் சாத்தியமான பலனைத் தரும்"என்று மேலும் குறிப்பிட்டார்.

"முருங்கையானது பயிரிடப்பட்டு ஆறு முதல் எட்டு மாதங்களிலேயே முதல் அறுவடையை வழங்கக்கூடியது. மேலும் வறட்சியை தாங்கக் கூடிய வல்லமையுடன், பசுமையான ஊட்டச்சத்து மிகுந்த இலைகள், காய்கள், வேரைக் கொண்டு மிக வேகமாக வளரக்கூடியது. வேர் முதல் காய் வரை அதன் அனைத்து பகுதிகளுமே பயன் மிக்கவை" என ரிஸ்வி சஹீட் மேலும் தெரிவித்தார். 'ஹேலீஸ அக்ரிகல்சர்' ஆனது அரசாங்க நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த ஜீவாதார திட்டத்தை மேலும் முன்னெடுக்கவுள்ளது.

தேசிய ஆய்வின்படி, 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளில் நிறை குறைவு, வளர்ச்சிக் குறைபாடு மற்றும் கரு அழிவு என்பவை முறையே 23.5%, 13.1% மற்றும்19.6% ஆகக் காணப்படுகி றது. அதே நேரம் எடை குறைந்த குழந்தை பிறப்பு வீதமானது 18% ஆக பதிவாகியுள்ளது. மேலும் 1 முதல் 3 வயது வரையான குழந்தை களுக்கு தேவையான 14வீத புரதம், 40 வீத கல்சியம், 23 வீத இரும்புச்சத்து மற்றும் அதிக விற்றமின்களை, 1 மேசைக்கரண்டி முருங்கை இலைத்தூள் மூலம் பெற்றுக்கொடுக்க முடியுமென இந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கர்ப்பிணிப்பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் நாளாந்தம் தேவைப்படும் கல்சியம் மற்றும் இரும்ச்சத்தை 6 மேசைக கரண்டி முருங்கை இலைத்தூள்மூலம பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹேலீஸ் அக்ரிகல்சரின் இந்த ஜீவாதார திட்டத்தின் மூலம்,விவசாயிகள் ஊட்டச்சதது மற்றும்பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதோடு, தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான ஒரு சநதர்ப்பமாகவும் இது அமைநதுள்ளது. (இ-7)

## இலங்கை பொலிஸ் சீருடையில் மாற்றம்

இலங்கை பொலிஸ் பிரிவினரின் சீருடையில் மாற்றம் கொண்டுவரப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய காலத்திற்கு ஏற்ற வகையில் சீருடையில் மாற்றம்செய்யப்ப முடியுமா? என ஆராயப்பட உள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ் பிரிவின் நன்மதிப்பை உயர்த்தும் வகையிலும் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த விடயம் குறித்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூகத்திடமும் கருத்துக் கணிப்பு பெறப்பட உள்ளது.

இதில் சீருடை மாற்றம் குறித்த படிவத்தை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறும் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு மருத்துவ பட்டம் வழங்க சட்ட அனுமதி

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை தடைசெய்யுமாறும் அதில் வழங்கப்படும் பட்டங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாதெனவும் நாடளாவிய ரீதியில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மருத்துவ பட்டம் வழங்கும் அனுமதி குறித்த நிறுவனத்திறகு சட்டரீதியாக உள்ளதென மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாலபே மருத்துவ கல்லூரியினால்பட்டம்பெற்றதம்மை இலங்கை மருத்துவ சபை பதிவுசெய்வதற்கு மறுப் பதாக தெரிவித்து, குறித்த கல்லூரியின் மாணவர்கள் சிலர் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி விஜித் மலலேகொட இத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

மாலபே மருத்துவ கல்லூரிக்கு வைத்திய பட்டம் வழங்கும் சட்ட அதிகாரம் இல்லையென பிரதிவாதிகள் தரப்பால் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகளை நிராகரித்த நீதிபதி, இக்கல்லூரியில் பட்டம் பெற்ற மாணவர்களை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சபைக்கு உத்தரவிட்டுள்ளார்.(இ-7)

## கம்மன்பிலவுக்கு எதிரான வழக்கில் ஆஸி தம்பதிகளுக்கு மன்று அழைப்பு



பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான வழக்கு விசாரணைகளுக்காக அவுஸ்திரேலிய தம்பதிகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.குருசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த மோசடி விடயம் தொடர்பில் முறைப்பாட்டினை வழங்கிய அவுஸ்திரேலிய தம்பதியினரை நீதிமன்றில் ஆஜராகுமாறு வெளிவிவகார மற்றும் நீதி அமைச்சின் ஊடக அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இது தொடர்பிலான அறிக்கையினை எதிர்வரும் பெப்ரவரி 16ஆம் திகதி நீதிமனறில் சமர்ப்பிக்குமாறும் மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.குருசிங்க உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மோசடி வழக்கு தொடர்பில் உதய கம்மன்பில கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, பிணைவழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புத்தளம்-மன்னார் வீதி விவகாரம்; மனுவை விசாரிக்க திகதி குறிப்பு

(கொழும்பு)

புத்தளத்தில் இருந்து மன்னார் வரை வில்பத்து சரணாலயத்தின் ஊடாகச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தைக் கைவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்வதற்கு, உயர்நீதிமன்றம் திகதி குறித்துள்ளது.

குறித்த வீதியானது அபிவிருத்தி செய்யப்படுமாயின், வனாந்தரத்துக்கு மாத்திரமல்ல விலங்குகளுக்கும் பாரிய பாதிப்பு ஏற்படும் என மனுதாரர் தரப்பு குறிப்பிட்டுள்ளது. ஆகையால், அபிவிருத்தி செய்யும் அந்தத் தீர்மானத்தை கைவிடுவதற்கு உத்தரவிடுமாறே, அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

மனுவில் பிரதிவாதியாக, அமைச்சர் றிசாத் பதியுதீன் குறிப்பிடப்பட்டுள்ளார். குறிப்பிட்ட மனு, நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக கொள்ளப்பட்ட வேளை, அந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என, சட்டமா அதிபர சார்பில் ஆஜரான, சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித் தார்.

இதேவேளை, அந்தவீதியை, மக்கள் நீண்டகாலமாக, பயன்படுத்தாமையால், அதனை அபிவிருத்தி செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எந்தத் தடையும் இல்லை என, பிரதிவாதியான அமைச்சர் றிசாத் பதியுதீன் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி குறிப்பிடப்பட்டுள்ளார். மனுவை ஆராய்ந்த நீதிமன்றம், இந்த மனுவை ஜூலை 19ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு திகதி குறித்தது. (இ-7)




# எல்லோரும் கெட்டவர்கள்தான்!

முன்னொரு காலத்தில் அங்கிரசர் என்றொரு ரிஷி, வனத்தில் வசித்து வந்தார். அவர் மிகவும் புகழ் பெற்றவர். அவரிடம் மாணாக்கர்கள் பலர் இருந்தனர். அவருடைய ஞானத்தில் இருந்து கணிசமான அனுகூலத்தை அவர்கள் பெற்றிருந்தனர் எனலாம்.

அந்த மாணவர்களில் சிலர், பக்தியும், கடமையுணர்வும் கொண்டவர்கள். மற்றவர்களைவிட எளிதில் எதையும் கிரகித்துக் கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்களுடைய நற்பண்புகள் காரணமாக மற்ற மாணவர்களால் அவர்கள் மதிக்கப்பட்டனர். ஆனால், அறிவுக் கூர்மையற்ற சிலர் மட்டும், அந்த நல்ல மாணவர்களிடம் பொறாமை கொணடிருந்தனர். குருவின் உபதேசங்களைக் கிரகித்துக் கொள்ளும் திறன் தங்களிடம் குறைவாயிருப்பதை அவர்கள் மறந்துவிட்டனர்.



ஏனோ குருவின் பாரபட்சமற்ற தன்மையில் அவர்களுக்குச் சந்தேகம். அவர் பக்தியுணர்வுடைய மாணவர்களுக்கு மட்டும் ரகசியமாக விசேஷ அறிவைப் புகட்டுவதாக எண்ணிக் கொண்டனர்.

ஒருநாள் குருதேவர் தனித்திருந்த போது அவரிடம் சென்று, "ஐயனே! தாங்கள் பாடம் கற்பிப்பதில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று சந்தேகப்படுகிறோம். தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டும் உங்கள் ஞானத்தின் முழுப்பலனையும் நீங்கள் வழங்குவதாய் கருதுகிறோம். ஏன் எங்களுக்கும் அந்தச் சலுகையை விரிவுபடுத்தக் கூடாது?"என்று கேட்டனர்.

குருதேவர் அந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்தார். ஆனாலும், அமைதியாகப் பதிலளித்தார்.

"நான் உங்கள் அனைவரையும் ஒரே மாதிரிதான் மதித்து நடத்துகிறேன். யாருக்கும் தனிப்பட்ட முறையில் சலுகை காட்டவில்லை. உங்களில் சிலர் விரைவாக முன்னேறியிருந்தால், நான் சொல்கிறவற்றை அவர்கள் ஊன்றிக் கவனித்திருக்க வேண்டும். நீங்களும் அவ்வாறு முயன்று கற்பதை யார் தடுத்தது?; என்று கேட்டார் அவர்.

ஆனால், மாணவர்கள் அவருடைய பதிலில் திருப்தியடையவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்த குரு, "ரொம்ப சரி! குறைப்பட்டுக் கொள்கிறவர்கள் மீது நான் விசேஷ கவனம் செலுத்துகிறேன். ஆனால், ஒரு நிபந்தனையின் பேரில்தான். ஒரு சின்ன பரீட்சை வைப்பேன். அதில் நீங்கள் தேறியாக வேண்டும்.

"பரீட்சை இதுதான். நீங்கள் அடிக்கடி போய்வருகிற பக்கத்து கிராமத்துக்குப் போக வேண்டும். அங்கிருந்து மிகவும் தகுதியான, எல்லாவிதத்திலும் நிறைவான ஒருவரை நீங்கள் அழைத்து வர வேண்டும் அவ்வளவுதான்," என்றார்.

(தொடரும்...)




- 1662 - ஒன்பது மாத முற்றுகையின் பின்னர் சீனாவின் இராணுவத் தளபதி கொக்சிங்கா தாய்வான் தீவைக் கைப்பற்றினார்.
- 1788 - ஐசாக் பிறிக்ஸ் மற்றும் வில்லியம் லோங்ஸ்ட்ரீட் ஆகியோர் நீராவிப்படகுக்கான காப்புரிமம் பெற்றனர்.
- 1793 - ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1814 - பிலிப்பீன்சில் மயோன் எரிமலை வெடித்ததில் 1,200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1832 - ஆசியாவின் முதலாவது அஞ்சல் (தபால்) வண்டி சேவை(mail-coach) கண்டியில் ஆரம்பமாகியது.
- 1864 - டென்மார்க்-புரூசியா போர் ஆரம்பமானது.
- 1880 - யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் முதலாவது தபால் வண்டி (mail coach) சேவையை ஆரம்பித்தது.
- 1884 - ஒக்ஸ்ஃபோர்ட் ஆங்கில அகராதியின் முதற் பதிப்பு வெளியானது.
- 1893 - தொமஸ் எடிசன் தனது முதலாவது அசையும் படத்துக்கான படப்பிடிப்பகத்தை நியூ ஜேர்சியில் கட்டி முடித்தார்.
- 1908 - போர்த்துக்கல் மன்னன் முதலாம் கார்லொஸ் மற்றும் அவனது மகன். இளவரசர் லூயிஸ் பிலிப் லிஸ்பன் நகரில் கொல்லப்பட்டனர்.
- 1913 - உலகின் மிகப்பெரிய தொடருந்து நிலையம் Grand Central Terminal நியூயோர்க் நகரில் திறக்கப்பட்டது.
- 1918 - ரஷ்யா ஜூலியன் நாட்காட்டியில் இருந்து கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1924 - சோவியத் ஒன்றியத்தை ஐக்கிய இராச்சியம் அங்கீகரித்தது.
- 1946 - நோர்வேயின் ட்றிகிவா லீ ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது செயலாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1958 - எகிப்து மற்றும் சிரியா ஆகியன இணைந்து 1961 வரையில் ஐக்கிய அரபுக் குடியரசு என ஒரு நாடாக இயங்கின.
- 1974 - பிரேசிலில் 25-மாடிக் கட்டடம் ஒன்றில் தீப்பற்றியதில் 189 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - 15 ஆண்டுகள் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த ஈரானின் மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி டெஹ்ற்ரான் திரும்பினார்.
- 1998 - கிளிநொச்சிநகர் மீதான தாக்குதல் - 1998: கிளிநொச்சி நகரம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஆரம்பமாகியது.
- 2003 - கொலம்பியா விண்ணோடம் பூமியின் வளிமண்டலத்தினுள் வெடித்துச் சிதறியதில் இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர்.
- 2004 - சவுதி அரேபியாவில் ஹஜ் பயணத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 251 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - நேபாள மன்னர் ஞானேந்திரா நாடாளுமன்றத்தைக் கலைத்து நாட்டைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.
- 2005 - கனடா சமப்பால் திருமணத்தை சட்டபூர்வமாக்கிய நான்காவது நாடானது.
- 2007 - மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதலில் பேருந்து ஒன்று சிக்கியதில் 2 அதிரடிப்படையினர் 6 காவற்துறையினர் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1905 - எமிலியோ செக்ரே, நோபல் பரிசு பெற்றவர். (இ. 1989)
- 1931 - போரிஸ் யெல்ட்சின், ரஷ்ய முன்னாள் அதிபர் . (இ. 2007)

**இறப்புகள்**

- 1958 - கிளிண்டன் டேவிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி. 1888)
- 1976 - வேர்னர் ஐசன்பேர்க், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் . (பி. 1901)
- 1976 - ஜோர்ஜ் விப்பிள், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் . (பி. 1878)
- 1986 - அல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்ற சுவீடன் எழுத்தாளர் . (பி. 1902)
- 1999 - வானம்பாடி யோகராஜ், வில்லிசை கலைஞர், நாடக ஆசிரியர், நடிகர், மேடைப்பாடகர் . (பி.1948)
- 2003 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை . (பி. 1961)

**சிறப்பு நாள்**

- ஐக்கிய அமெரிக்கா - கறுப்பின வரலாறு மாதம் ஆரம்பம்.




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 70 | 120 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 160 | 200 | 200 | 200 |
| தக்காளி | 80 | 100 | 120 | 70 | 80 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 40 | 20 | 30 | 20 | 40 | 60 |
| கரட் | 80 | 100 | 60 | 60-120 | 60 | 120 | 60 |
| பூசணி | 60 | 60 | 35 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 50 | 60 | 50 | 80 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 80 | 120 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 100 | 120 | 120 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 60 | 100 | 200 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 60 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 200 | 150 | 170 | 160 | 160 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 60 | 80 | 120 | 70 |
| பீற்றூட் | 40 | 100 | 170 | 60 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 170 | 120 | 60 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 600 | 600 | 800 | 60 |
| போஞ்சி | 80 | 100 | 70 | 80 | 60 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 40 | 100 | — | 100 | 60 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 200 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 55 | 50 | 50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 180 | 200 | 160 | 160 | 140 | 150 |
| வெங்காயப்பூ | 80 | 60 | 60 | 60 | 80 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 60 | 60 | 50 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 60 | 60 | 80 | 80 |

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உயிர்களிடத்து அன்பு செலுத்துதல் வேண்டும் சாரதிகளே! கொல்லுதல் பாவம்

அன்பு பற்றி பாரதியார் அழகுபடக் கூறியுள்ளார். பாரதியார் கூறிய அன்பு உயிர்கள் அனைத்திடமும் காட்டப்பட வேண்டும் என்பதுதான்.

மனிதன் மீது மனிதன் செலுத்தும் அன்பு சுயநலமானது. அதை பெருமையான விடயம் என்று யாரும் கூறிவிடக்கூடாது.

மனிதன் மீது மனிதன் அன்பு செலுத்துவது சொந்த நலம் சார்ந்தது அல்ல என்று யாரேனும் வாதிட்டால், மிருகங்கள் தாம் ஈன்ற தம் கன்றுக்குட்டிகள் மீது காட்டும் அன்பும் பறவைகள் கூடு கட்டி குஞ்சு பொரித்து அவற்றுக்கு உணவு ஊட்டி வளர்க்கின்ற அன்பும் மனித அன்பை விஞ்சிவிடும்.

ஆகையால்தான் மனிதன் மனிதன் மீது காட்டும் அன்பு சுயநலமானது. மனிதன் அனைத்து உயிர்கள் மீதும் செலுத்தும் அன்பு தெய்வீகமானது.

சகல உயிர்களிடத்தும் அன்பு செலுத்தக் கூடிய தகைமை மனிதர்களுக்கு மட்டுமே இறைவன் கொடுத்துள்ளான்.

இப்பூவுலகில் வாழும் அனைத்து ஜீவராசிகள் மீதும் அன்பு செலுத்துதல் என்பதை எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன.

உயிர்க்கொலை என்பது மிகுந்த பாவம். இருந்தும் சிலர் சமயத்தை சமயத்துக்கு ஏற்றாற்போல் மாற்றி புலால் உண்பதற்கு வழி தேடியுள்ளனர்.

இஃது மிகப்பெரும் பாவச் செயல். உண்மையில் உயிர்க்கொலையை மனிதர்கள் செய்தல் பாவம்.

ஆதலால்தான் உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்று பாரதி பாடினான். அந்த அன்பை குழந்தைகளிடம் ஏற்படுத்திவிட்டால், அவர்கள் எந்தக் காலத்திலும் அதிலிருந்து விலகார் என்பது பாரதியின் முடிவு.

இருந்தும் பிற உயிர்கள் மீது நாம் அன்பு காட்டுகிறோமா? என்ற சந்தேகம் பல இடங்களில் ஏற்படவே செய்கிறது. வீதிகளில் இறந்து கிடக்கும் நாய்கள், பூனைகள்; வீதி ஓரங்களிலும் சந்தைகளிலும் உணவுக்காக அலையும் நாய்க்குட்டிகள்; பெற்றதாயின் பால் குடிப்பதற்கே உரிமை மறுக்கப்பட்ட பூனைக்குட்டிகள் என்றவாறு மிகப்பெரும் கொடுமைத்தனங்களைக் காணும் போது,

உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்று பாரதி பாடியதும் அதனை குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்ததும் எந்த நேரிய விளைவையும் தரவில்லை என்றே கூற வேண்டும்.

இதில் இன்னும் வேதனையைத் தரக்கூடிய விடயம் வீதிகளைக் கடக்கும் பசுக்களையும் காளைகளையும் கன்றுகளையும் வீதியால் வேகமாகச் செல்லும் கனரக வாகனங்கள் முட்டி மோதி அவற்றின் உயிரைப் பறிக்கும் கொடுஞ் செயலாகும்.

வீதிவிடங்கன் என்ற சிறுவன் தேரில் வரும் போது ஒரு மாட்டுக்கன்றைக் கொன்றான் என்ற குற்றத்துக்காக, வீதிவிடங்கனை அவன் தந்தை மனுநீதிச்சோழ மகாராஜன் தேரோட்டிக் கொன்று ஆன் கன்றின் தாய்ப்பசு கதறியது போல கோன் கன்றை இழந்து மனுநீதி அழுது புலம்பினான் என்று புராணத்தில் படிக்கிறோம்.

ஆனால் ஏ9 வீதியில் – புளியங்குளப் பகுதியில் பஸ் வண்டி மோதி பதினைந்து எருமை மாடுகள் உயிரிழந்தன என்ற செய்தி நம் இதயத்தை நெருட வேண்டாமோ.

ஓ! அந்தோ அநியாயம். கொடும் பாவம். அன்புக்குரிய சாரதிகளே உயிர்களிடத்து அன்பு செலுத்துங்கள். சாரத்தியத்தின் முதல் தகைமை உயிர்களிடத்து அன்பு செலுத்துவதாக இருக்கட்டும்.

## டெங்கு ஒழிப்புக்கு புதிய செயற்றிட்டம்

(கொழும்பு)

வேகமாக பரவிவரும் டெங்கு நோயை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக புதிய செயற்றிட்டமொன்று அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உயிர்க்கொல்லி டெங்கு நோயை ஒழிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய செயறறிட்டம் வெற்றி பெறுவதற்கு நாட்டு மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய பல் மருத்துவமனையின் (போதனா) முதற் கட்டமான புதிய கட்டடத் தொகுதி திறந்து வைத்தல் மற்றும் இரண்டாம் கட்ட கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலவச மருத்துவ சேவையைப் பலப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய மருத்துவமனைகளை எதிர்காலத்தில் மக்களுக்கு உரித்தாக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும், மக்களைப் பாதுகாப்பதற்காக சுகாதாரத் துறைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மருத்துவ நிபுணர்கள் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறை சுகாதார துறையில் பாரதூரமான நெருக்கடியாக இருக்கிறது. புதிய மருத்துவர்களை மருத்துவமனைகளுக்கு இணைப்பு செய்யும் முறைமையிலுள்ள சவால்களை நினைவூட்டிய ஜனாதிபதி அந்த பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கூட நாட்டின் சுகாதார துறையினர் ஆற்றும் உன்னதமான பணியை பாராட்டுவதாக தெரிவித்தார். (இ-7)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் பாடசாலை அதிபர் இ.சிறிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேணியஸ், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சண்முகராசா கலந்து கொள்வார். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம் Pump House, காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில சாந்தசோலைக் கிராமத்திலும் மன்னாா பிரதேசத்தில நாணாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, கடலோி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளுக்கு அர்ப்பணிப்போம்



✦ இறைவன் வெளியிலும், வெகு தொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால், நம் உள்ளத்துக்குள்ளேயே அவன் இருப்பதாக உணர்ந்து கொண்டால் ஞானம் உண்டாகி விடும்.

✦ தனது இதயத்திற்குள் இறைவனைக் கண்டவன், வெளியுலகத்திலும் அவனைக் காண்பான். தனக்குள்ளே இறைவனைக் காணாதவன், கோயிலிலோ பிற இடங்களிலோ அவனைக் காண இயலாது.

✦ குணத்தாலும், அளவாலும் ஞானம் வேறுபடும். சாதாரண மனிதர்களுடைய ஞானம், ஓர் அறையை மட்டும் பிரகாசமடையச் செய்யும் தீபச்சுடரைப் போன்றது. பக்தனுடைய ஞானம் சந்திரனின் பிரகாசத்தைப் போன்றது. அவதார புருஷரின் ஞானம் பலமடங்குசக்தி கொண்ட சூரியப்பிரகாசத்தைப் போன்றது.

✦ இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள்கள் எல்லாம் ஆயிரம் மடங்காக நமக்கே மீண்டும் திரும்பிவிடும். ஆனால், செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் எண்ணத்துடன் செய்பவர்களை இன்ப துன்பங்கள் தீண்டுவதில்லை.

✦ ஆயிரம் வழிமுறைகளில் முயன்றாலும், இறைவனுடைய அருளில்லாமல் எதனையும் அடைய முடியாது. இறைவனின் கருணை இன்றி யாரும் அவனை உணர முடியாது.

✦ காற்று எங்கும் நிறைந்திருந்தாலும், பாய்மரத்தை அதன் போக்கில் விரித்தால் தான் படகு தடையின்றி செல்லும். அதுபோல இறைவனின் கருணை எங்கும் நிறைந்திருந்தாலும், மனம் என்னும் பாய்மரத்தை அவன் பக்கம் விரித்தால் தான், சாதகமான சூழ்நிலையை அடையலாம்.

## ஜோதிடர் சுமணதாஸவிற்கு கடவுளாக மாறிய மகிந்த!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு கடவுளாக தென்படுவதாக மகிந்தவின் ஆஸ்தான சோதிடர் சுமணதாஸ அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ எனக்கு கடவுள் போன்றவர். எந்தவொரு விடயத்திற்கும் அழுத்தம் பிரயோகித்ததில்லை.

எனக்கு சாதகமான அனைத்து விடயங்களையும் செய்யும் ஒரு நபராக மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டுள்ளார்.

எனது தொழில் மீது உயிர் போன்று அன்பும் வைத்துள்ளார்.

இவ்வாறு இருக்கின்ற வேளையில், நான் ஒரு போதும் யாருடைய அழுத்தத் திறகமைவாகவும் ஆரூடம் கூறியதில்லை எனவும் அந்த ஜோதிடர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பற்களை எவ்வாறு சுத்தம் செய்ய வேண்டும்? எதற்காக சுத்தம் செய்ய வேண்டும்?**

பழைய பழமொழி ஒன்று உள்ளது.

பல்சுத்தமானால் பாதி சுத்தமாகும்

முகம் சுத்தமானால் முழுவதும் சுத்தமாகும்




நமது உடலில் பற்களுக்கு முக்கிய இடமுண்டு. பேசுவதற்கும் உணவு உண்பதற்கும் பல் அவசியம் தேவை. எனவே பற்களைப் பாதுகாப்பது அவசியம். இரவு முழுவதும் நாம் உறங்கும் போது வாயில் சேருகின்ற துர்நாற்றத்தையும் அணுக்களையும் போக்குவதற்குப் பல் துலக்க வேண்டும். பழைய காலத்தில் பல் துலக்குவதற்கு உமி, மிளகு மற்றும் உப்பு சோத்து அரைத்த பொடி, வேப்பங்குச்சி ஆகியவற்றை பயன்படுத்தினார்கள். குடிசை முதல் அரண்மனைவரை இதையேதான் பயன்படுத்தினார்கள்.

பற்களைச் சுத்தம் செய்வதற்கு சில விதிமுறைகள் உள்ளது. சூரியன் உதிப்பதற்கு முன் பற்களைச் சுத்தம் செய்வதென்றால் கிழக்குத் திசைநோக்கி நின்றுகொண்டும் சூரியன் உதித்தபின்பு என்றால் ஈசான மூலையை நோக்கி (வடக்கு- கிழக்கு திசை) நின்று கொண்டும் பல் துலக்க வேண்டும். பற்களைச் சுத்தம் செய்யும் போது காமதேவனையும் வனஸ்பதியையும் மனதில் தியானம் செய்து கொள்ள வேண்டும். (தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ வலம்புரிச் சங்கு லெட்சுமியின் இயல்புடையது. அது இருக்கும் இடம் செல்வப் பெருக்கோடு வாழும். லெட்சுமி விக்ரகத்தின் கால் ஓரத்தில் வலம்புரிச் சங்கு வைத்து வழிபட்டால் வளம் பெருகும்.

-சங்கு சாஸ்திரம்

✦ சிவபெருமானுக்கு வில்வத்தாலும் நாகலிங்க புஷ்பத்தாலும் அர்ச்சித்து வணங்கி, நிச்சயதார்த்தம் செய்தால் அத்திருமணம் உயர் மணமாக அமையும். ஜன்ம ஜன்மமாகத் திருமணம் தொடரும். ஒவ்வொரு பிறவியிலும் கணவன், மனைவி மாறமாட்டார்கள்.

-சிவபுராணம்

✦ மழை பெய்தோ சூறைக்காற்றடித்தோ அல்லது காரணமின்றி உங்கள் வீட்டிற்குள்ளே மரமோ, வீட்டு வாசலில் உள்ள மரமோ அல்லது வீட்டிற்கு எதிரேயுள்ள மரமோ சாய்ந்தாலும் முறிந்து விழுந்தாலும் அபசகுணமாகும். இது விழுந்த நாள் தொடங்கி 7 நாட்கள் வரை எந்தச் சுபகாரியங்களும் செய்தல் கூடாது.

-சகுன சாஸ்திரம்

✦ கோயில் கருவறையில் திரை போட்ட பின் பிரகாரம் சுற்றுதல் கூடாது.

-இந்து சாஸ்திரம்

✦ இறை சந்நிதியில் ஒருவர் தன்னைத் தானே சுற்றுதல் கூடாது.

-இந்து சாஸ்திரம்

✦ ஒருவர் நற்காரிய நிமித்தமாய் வீட்டை விட்டு வெளியே புறப்படும் போது எதிரில் முட்டையுடன் ஒருவர் வந்தால் கெட்ட சகுனமாகும். எதிரே முட்டை விற்பதும் ஆகாது.

-சகுன சாஸ்திரம்

# தேசிய இளைஞர் ரூபவாஹினி கரப்பந்தாட்டப் போட்டி புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று அணிகள் சம்பியன்








(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட காரியாலயம் ஒழுங்கு செய்த முப்பத்தொராவது தேசிய இளைஞர் ரூபவாஹினி கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் ஒட்டு சுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

பதின்மூன்று வயதுக்கும் இருபத்தைந்து வயதுக்கும் இடைப்பட்டவர்களை உள்ளடக்கி பிரதேச செயலக பிரிவு அடிப்படையில் ஆண்கள் அணி இரண்டும் பெண்கள் அணி இரண்டினையும் விண்ணப்பிக்குமாறு கோரிய நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று.துணுக்காய், மாந்தை கிழக்கு. மணலாறு உள்ளிட்ட ஆறு பிரதேச செயலக பிரிவுகளிலிருந்தும் ஐந்து பெண்கள் அணிகளும் பதினொரு ஆண்கள் அணிகளும் இப்போட்டியில் பங்குகொண்டன.

காலை முதல் மாலை ஆறு முப்பது மணிவரை இடம்பெற்ற இப்போட்டிகளில் பெண்களுக்கான போட்டியில் புதுக்குடியிருப்பு உடையார்கட்டு வடக்கு நண்பர்கள் இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் முத்து ஐயன்கட்டு பாரதி இளைஞர் கழக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

ஆண்களுக்கான போட்டியில் கரைதுறைப்பற்று இலுப்பையடி இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும் ஒட்டுசுட்டான் மாங்குளம் ஜெயந்த் ஸ்ரார் இளைஞர் கழக அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

முதலாமிட த்தினை பெற்றவர்களுக்காக வெற்றிக் கிண்ணமும் ஏழாயிரத்து ஐந் நூறு பணப்பரிசும் இரண்டாமிட த்தை பெற்றவர்களுக்காக வெற்றிக் கிண்ணமும் ஐயாயிரம் பணப்பரி சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வழங்கப்பட்டது. (க-281)

# கரவெட்டி ஞானம்ஸ் அணியை வீழ்த்தி பருத்தித்துறை வீனஸ் அணி சம்பியன்



புலம்பெயர்வாழ் அல்வாய் மக்களின் ஆதரவுடன் அல்வாய் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை இலகுவாக வீழ்த்தி சம்பியனாகி வெற்றிக்கிண்ணத்தையும் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் வென்றது வீனஸ் விளையாட்டுக் கழகம். நாணய சுழற்சியிலவென்ற வீனஸ்விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் விளையாட்டுக்கழகம் 5.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 74 ஓட்டங்கள் பெற்றது. வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாடடுக்கழகம் 8 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கும் 69 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக பிரசாந் தெரிவானார். (க)

# ஞானவைரவர் வெற்றி



தெல்லிப்பழை பிரதேச செயலக மட்ட துடுப்பாட்ட போட்டியில் அரையிறுதியில் விநாயகர் விளையாட்டுக் கழகத்தை பந்துவீச்சில் வீழ்த்தியது.

இறுதிப்போட்டியில் அளவெட்டி மத்தி அணியை நான்கு விக்கெட்டுகளால் வென்றது அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டு கழகம்.

அளவெட்டி மத்தி அணி நிர்ணயித்த 26 என்ற இலக்கை நோக்கி துடுப்பாடிய அளவெட்டி ஞான வைரவர் விளையாட்டு கழகம்3.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. (க)

# இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக சொக்கர் லீக் உதைபந்தாட்ட முடிபுகள்





இமையாணன் மத்தியின் சொக்கர் லீக் உதைபந்தாட்ட போட்டிகள் 29.01.2017 அன்று இடம்பெற்றன.

முதல் போட்டியில் ரெட் கிங்ஸ் அயன் ஸ்ரார் 01:00 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. கிடைக்கப்பெற்ற தண்ட உதையை நிறோயன் கோலாக்கினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தமிழ்மாறன் தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் சுகுமாரின் அதிரடி கோல் மூலம் பாயும் புலி அணி பிளாக் ஹொக்ஸ் அணியை 02:01 அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் ஆட்டநாயகனாக லோகேஸ் தெரிவானார்.

நடைபெற்ற மூன்றாவது போட்டியில் இமையூர் லயன்ஸ் அணியும் ஏலியன் போய்ஸ் அணியும் எந்த ஒரு கோலினையும் பதிவு செய்யாமல் சமநிலையில் முடிவுற்றது.

ஆட்டநாயகனாக இமையூர் லயன்ஸ் வீரர் அலெக்ஸன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## மைத்திரி உயிரிழப்பார்; ...

பதியாவுார் என்று ஆருடம் கூறிய காணொளி ஒன்றை குறித்த ஜோதிடர் சமூகவலைத்தளத்தில் அண்மையில் பதிவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## நிலைபேறு அபிவிருத்திச் ...

அனுப்பி வைக்கப்பட்ட இலங்கை நிலைபேறு அபிவிருத்தி சட்டமூலம் தொடர்பில் குழு நிலையில் ஆராயப்பட்டது.

இதன்போது நிலைபேறு அபிவிருத்தி தொடர்பில் மத்திய அரசால் வழங்கப்பட்ட கைநூல்கள் உறுப்பினர்களிடம் விநியோகிக்கப்பட்டன. இதன்பின்னர் குறித்த சட்டமூலம் மீதான விவாதங்கள் நடைபெற்றன. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையிலும் புதிய அரசியலமைப்பு வரவுள்ள நிலையிலும் நாடு முழுவதும் உள்ள அனைத்து மக்களும் ஒரே சிந்தனையை கொண்டுள்ளார்கள்.

ஆகவே நாடு முழுவதும் ஒரே மாதிரியான அபிவிருத்தி இடம்பெறுகின்றது என்ற தோற்றப்பாட்டை காட்டுவதற்கே இந்த சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது. இதுதவிர மாகாணங்களின் அபிவிருத்திகளை மத்திய அரசு கையிலெடுத்து. மாகாணங்களின் அதிகாரங்களை பறித்தெடுக்கும் முயற்சியாகவும் இது உள்ளது. இதுதவிர தமிழர் தரப்பு சமஷ்டி கோரிக்கையை முன்வைத்துள்ள நிலையில் அதிகாரங்களை பறித்தெடுக்கும் சட்டமூலத்துக்கு ஆதரவளிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா, ஒரு வாசலுக்குள்ளாக அவர்கள் முயற்சித்தார்கள் அந்த கதவு மூடியதும் மறுவாசலுக்குள்ளாக முயற்சிக்கின்றனர். நிலைபேறு அபிவிருத்தி சட்டமூலம் ஏற்கெனவே தேசிய கொள்கைகள் என்று சொல்லப்படுகின்ற நிரலுக்கு கீழ் இந்த சட்டத்தை கொண்டுவர முயற்சித்தார்கள். இதற்கு கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

தேசிய அபிவிருத்தியில் மாகாண சபைகளின் பங்களிப்பு தேவை என அரசியலமைப்புச் சபைகள் பரிந்துரை செய்யும் நிலையில் இவ்வாறான ஒரு சட்டமூலத்தை பின்கதவின் ஊடாக கொண்டுவர முயற்சிப்பது ஏன் என்று தெரியவில்லை. அபிவிருத்தி என்ற போர்வையில் அதிகாரங்களை மத்திய அரசு எடுக்க முயல்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. நிராகரிக்கப்பட வேண்டியது என எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவித்தார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த அவைத் தலைவர் சிவஞானமும் இது மாகாண சபைகளின் அதிகாரத்தில் கை வைக்கும் சட்ட மூலம்தான் என தெரிவித்தார்.

எனினும் குறித்த அபிவிருத்தி சட்டமூலம் தேசிய அபிவிருத்திகளை குறிக்கோளாகக் கொண்டது எனவும், இந்த சட்ட மூலம் அபிவிருத்திக்கு ஏற்றதா? இல்லையா? என ஆராயாமல் வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தை பறிக்கின்றது என்ற ஒரே காரணத்துக்காக நாம் இந்த சட்டமூலத்தை எதிர்க்கின்றோம். இது மூட்டைப்பூச்சிக்கு பயந்து வீட்டைக்கொளுத்தும் செயலுக்கு ஒப்பானது. ஆகவே இதன் நன்மை தீமைகள் முழுமையாக ஆராயப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார்.

அபிவிருத்திக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால் மத்திய அரசாங்கம் எமது கண்களையும் இடங்களையும் எடுத்து விட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விடும்.

நாட்டின் பொருளாதார மையம் என கூறுகின்ற அதேவேளையில் அங்கு தென்பகுதி மக்களை கொண்டு வந்து குடியமர்த்துவார்கள் இவ்வாறான ஒரு ஆபத்து தான் குறித்த சட்டமூலத்தில் உள்ளது. இவை முன்னரும் இங்கு நடைபெற்றுள்ளன. ஆகவேதான் இவற்றுக்கு நாம் எதிர்ப்பு தெரிவித்துள்ளோம் என தவநாதனின் கருத்துககு முதலமைச்சர் பதிலளித்தார்.

மகாவலி அபிவிருத்தி திட்டமும் இவ்வாறு எமது நிலத்தை கபளீகரம் கொள்வதற்காகத்தான் கொண்டுவரப்பட்டது. இதேபோன்று தான் இந்த சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது என விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

காணி பிடிப்பதற்கு இங்கு இராணுவம், வனவிலாகா, பிக்குகள் என பலர் இருக்கின்றார்கள். வலி வடக்கில் மக்களுடைய காணியில் இராணுவம் ஹோல்ப்(f) மைதானமும் அமைத்துள்ளது. இந்த நிலையில் இவர்களும் அதிகமாக மைதானம் அமைக்க வேண்டும் என கூறியுள்ளனர். ஆகவே இவை எல்லாமே காணி பிடிக்கும் நோக்கம் கொண்டவைதான் என உறுப்பினர் சர்வேஸ்வரன் கூறினார். இதன் பின்னர் குறித்த சட்டமூலத்துக்கு அங்கீகாரம் வழங்குவதில்லை. தமிழ் மக்களுடைய அதிகாரங்களை பறிக்கும் இந்த சட்ட மூலத்துக்கு தற்போதைய நிலையில் அங்கீகாரம் வழங்க முடியாது என கூறி குறித்த சட்ட மூலத்தை வடக்கு மாகாண சபை நிராகரிப்பதாக அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் சபையில் அறிவித்தார். (செ-4)

## மின்சாரம் தாக்கி ...

நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பத்தின் போது விக்னேஸ்வரன் கிரிதாஸ் (வயது 30) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன. (செ-11,15)

## ஜனவரி மாதத்தில் ...

யாழ்.மாவட்ட டெங்கு மீளாய்வு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றைய தினம் யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. அதன்போதே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே. நந்தகுமார் கருத்து தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் ஜனவரி மாதம் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. வழமையாக ஒக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோய் தாக்கம் பரவலாக காணப்பட்டு வருகிறது.

ஆனால் தொடர்ச்சியாக அனைத்து மட்டத்திலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இந்த நிலையில் இந்த வருடம் மிகவும் தீவிரமாக அதிகரித்துள்ளது. இதை கட்டுப்படுத்தாவிட்டால் உயிராபத்தை எதிர்கொள்ள நேரிடும். எனவே உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வவேண்டும்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் டெங்கு நோய்

## இராணுவ முகாம் ...

கடந்த பதினெட்டாம் திகதி இராணுவ முகாமுக்கு சென்ற இப் பகுதி மக்கள் தம்மை தமது சொந்த நிலத்தில் குடியேற்றுமாறு கேட்டதற்கு விமானப்படை அதிகாரி தமது பகுதிக்கு தம்மை அழைத்து சென்று தாம் அந்த பகுதியை விடுவித்து விட்டதாகவும் வனவள பாதுகாப்பு திணைக்களத்திடம் சென்று கடிதமொனறை பெற்று வந்து தந்து விட்டு காணிகளை துப்புரவு செய்யுமாறும் கூறியதாக மக்கள் தெரிவிக்கின்றனர்

இந்நிலையில் தமது காணிக்கு செல்லும் அவாவில் மறுநாள் காலையிலேயே வனவள திணைக்கள அதிகாரிகளை சந்தித்து தமது காணிகளை விடுவித்து கடிதம் தருமாறு கோரிக்கை விடுத்ததாகவும் தமது காணி ஆவணங்கள் அனைத்தையும் வனவள அதிகாரிகளுக்கு காட்டி தமது காணியை விடுவிக்குமாறு தாங்கள் முப்பத்தைந்து பேர் வரை சென்று கோரியதாகவும் அதற்கு பிரதேச செயலக அதிகாரிகளையும் அழைத்துக்

தாக்கம் அதிகளவில் காணப்படுவதுடன் ஏனைய பகுதிகளிலும் பரவலாக டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வருகிறது.

வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் மூலம் டெங்கு நோய் பரப்பப்பட்டாலும் அதையே காரணமாக கூறுக்கொண்டு இருக்க முடியாது ஏனெனில் டெங்கு நோய் பரப்பும் நுளம்பு எமது பகுதியில் அதிகமாக உள்ளது.

எனவே எமது நடவடிக்கைகள் சரியான முறையில் இருக்க வேணடும். அந்தவகையில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கு மும்முரமாக எமது தரப்பினர் செயற்பட்டு வரும் வேளையிலும் அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்பும் எமக்கு தேவையாகவுள்ளது.

புதிய கட்ட பகுதிகள், பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான காரணிகள் இருப்பதாக அறியப்பட்டு அதை கட்டுப்படுத்துவதற்கென அந்தந்த பகுதிகளில் குழு அமைத்து சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன்,

சுத்தப்படுத்தலுக்கான முன்னேற்ற அறிக்கையினை ஒவ்வொரு கிழமையும் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரியிடம் ஒப் படைக்கும் படியும் அறிவிக்கப்பட் டுள்ளது. அந்த செயற்பாடு தற்போது நடைபெற்று வருகிறது. இயன்றவரை ஏனையவர்களின் ஒத்து ழைப்பு உடனடியாக தேவையாகவுள்ளது என தெரிவித்திருந்தார். (செ-9)

## அபிவிருத்தி என்ற ...

கள் எனவும் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபையின் பேரவை செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மத்திய அரசாங்கமானது அனைத்து மாகாண சபைகளிற்கும் அங்கிகாரத்திற்காக அனுப்பி வைத்துள்ள இலங்கை நிலைபேறு அபிவிருத்தி சட்ட மூலம தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் விவாதத்தின் போது அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்திருப்பதாவது,

மாகாணங்களுக்கான உரித்துக்கள் சம்மந்தமாக அதிகார பகிர்வு விடயங்கள் சம்மந்தமாக பல விடயங்கள் பேசப்பட்டு வரும்போது ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் தமது அறிக் கைகளை அனுப்ப வேண்டிய கட்டாயம் இருக்கும் போது என்ன காரணத்திற்காக இலங்கை நிலைபேறு அபிவிருத்தி சட்டமூலம் எனும்

கொண்டு வந்து உரிய இடத்தினை பார்வையிட்டு அதனை விடுவித்து தர நடவடிக்கை எடுப்பதாகவும் இருபத்தி நான்காம் திகதி வருவதாக தெரிவித்ததாகவும் இருப்பினும் தமக்கு தெரியப்படுத்தாது இருபத்தி மூன்றாம் திகதியே குறித்த அதிகாரிகள் வந்து உரிய இடத்தைப் பார்த்துவிட்டு சென்றதாகவும் தம்மை அழைக்கவில்லை எனவும் இது தமக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்பின்னர் நேற்றைய தினம் குறித்தபகுதிக்கு காணிப் பகுதி உத்தியோகத்தர் கிராம அலுவலர் வனவள அதிகாரிகள் உள்ளிட்டோர் மீண்டும் வருவதாகவும் மக்களை குறித்த பகுதிக்கு ஆவணங்களுடன் வருமாறும் தமக்கு கூறியதாகவும் மக்கள் தெரிவித்தனர்

இந்நிலையில் நேற்று காலை மக்கள் அனைவரும் குறித்த பகுதியில் கூடியபோது குறித்த அதிகாரிகள் அப்பகுதிக்கு வருகைதராததால் அங்கு கூடிய மக்கள் தொலைபேசியூடாக பிரதேச செயலாளரை

இப்பேர்ப்பட்ட சட்டத்தை கொண்டு வர உள்ளார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அத்துடன் மத்திக்கு சகல அதிகாரங்களை எடுத்துக் கொள்வதற்காக ஒரு செயற்திட்டமாகவே இதனை நான் காண்கின்றேன். 2015ஆம் ஆண்டில் இருந்து எதிர்வரும் 15 ஆண்டுகளுக்கு அடைந்து கொள்ள வேண்டிய அபிவிருத்தி குறிக்கோள்களாக சகல நாடுகளுக்கும் 17 குறிக்கோள்கள் தரப்பட்டுள்ளன.

இத்தகைய இக் குறிக்கோள்களை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் இதன் அடிப்படையிலேயே வடக்கு மாகாண சபையானது செயற்பட்டு வருகின்றது. ஆகவே இது விடயமானது அவர்களுக்கு மாத்திரம் பொதுவான விடயமல்ல. அது எங்களுக்கும் பொருந்தும். ஆனால் எங்களுக்கு என்று சில உரித்துக்கள் 13ஆம் திருத்த சட்டத்தின் மூலம் தரப்பட்டுள்ளது. வடக்கு மாகாணம் தொடர்பான திட்டமிடலை நாங்கள் செய்ய முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இச் செயற்பாடானது எங்களது செயற்பாட்டுக்கு அமைவாக நடக்கின்றதா இல்லை அதற்கு அப்பால நடக்கின்றதா என்ற கேள்வியெழுகின்றது. மேலும் இவ் நிலையான அபிவிருத்தி குறிக்கோள்கள் சம்மந்தமாக சில விடயங்களை எடுத்து பார்த்தால் இதற்கு கையெழுத்திட்ட அரசாங்கமானது அதற்கு பாதகமாகவேதான் பல விடயங்களை செயற்படுத்தி வருகின்றது. அதாவது குறிக்கோள்களில் 16ஆவது குறிக்கோளான எந்தவிதமான வன்முறைகளை எடுப்படுத்த கூடிய விடயங்களை தவிர்த்தல் வேண்டும் என கூறுகின்றது. ஆனால் வடக்கிலே அரசாங்கமானது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இராணுவத்தை குவித்து வைத்துக்கொண்டு தான் வன்முறைக்கு எதிராக பேசுகின்றார்கள்.

ஆகவே நாம் பல விதமான விடயங்கள் தொடர்பாக மத்திய அர சாங்கத்துடன் பேச வேண்டியுள்ளதுடன் தற்போதும் பேசிக் கொண்டும் உள்ளோம்.

இந்த அடிப்படையில் நாங்கள் சில நடவடிக்கைகளை எடுக்கும் போது பல விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பல மிக்கதோர் இலங்கை எனும் தலைப்பில் தரப்பட்டுள்ள நூலிலே ஒரு பக்கத்தில் வடக்கு கிழக்கு பொருளாதார வாயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதேநேரம் 2ஆம் பக்கத்தில் கிழக்கு மற்றும் வட கிழக்கு பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டங்கள் என்பதின் கீழ் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அது சார்ந்த பகுதியை கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறை அடங்கிய

தொடர்புகொண்டு கதைத்தபோது இன்று வனவள அதிகாரி நீதிமன்று சென்றமையினால் வருகை தர முடியாதுஎனவும்மக்களைவருகை தருமாறு தான் அழைக்கவில்லை எனவும் உங்களை யார் வரச்சொனனது எனவும் வினவி குறித்த பகுதியிலிருந்து செல்லுமாறும் தாங்கள் உரியமுறையில் காணிகளை பார்த்து விடுவித்துவிட்டு தங் களிடம் பெற்றுக்கொண்டு உங்க ளுக்கு வழங்கும் போது அழைப்பதாகவும் தெரிவித்தார் இதனால் ஆத்திரமடைந்த மக்கள்,

இராணுவமும் அரச அதிகாரிகளும் எம்மை ஏமாற்றுகின்றனர் தமது காணி விடுவிப்பு தொடர்பான உறுதியான திகதி வழங்குமாறு கூறி அவ்விடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாலைவேளைவரை மக்கள் அப்பகுதியிலிருந்து விலகிச் செல்லாதநிலையில் குறித்த பகுதிக்கு வனவள திணைக்கள அதிகாரிகள் வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடினார்

இதன்போது உங்களுடைய காணிகளை உடனடியாக விடுவிக்க முடியாது அதற்குரிய கால அவகாசம் வேணுமென கூறியபோது எழுத்து மூலமாக எப்போது விடுவீர்கள என கூறுமாறு கோர எழுத்து மூல உத்தரவாதத்தை வழங்கமுடியாது எனவும்வரும்செவ்வாய்கிழமை குறித்த பகுதியை அதிகாரி களுடன் வந்து பார்வையிட்டு விடு விக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்தனர்

இதனையடுத்து தம்மை இராணுவமும் அரச அதிகாரிகளும் திட்டமிட்டு ஏமாற்றுவதாகவும் தாம் இவ்வாறே முகாமிலிருந்து துன்பங்களை அனுபவிக்க தயாரில்லை எனவும் தமது காணி விடுவிப்பு தொடர்பான உறுதியான திகதி வழங்குமாறு அதுவரை தாம் இந்த இராணுவ முகாமிற்கு முன்பாக இருப்பதாகவும் கோரி பிலவுக்குடியிருப்பு இலங்கை விமானப்படை முகாமிற்கு முன்பாக நேற்று நள்ளிரவுவரை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் அவர்களது போராட்டம் இன்னும் தொடரும் என தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலையில் வருகை தந்த மக்கள் உறுதியாக போராட்டத்தில் ஈடுபடுவதொடு உறுதிமொழி கிடைக்கும்வரை போராட்டம்தொடருமெனவும்அறிவித்துள்ளனர். (செ-28)

பொருளாதார வலயமாக மாற்றுதல் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதனூடாக விளங்கும் அர்த்தம் மத்திய அரசாங்கமானது மாகாண அரசாங்கத்திற்கு அப்பால் சென்று பெரும்பான்மை இனத்தவர்களை அங்கு கொண்டு வந்து குடியேற்ற கூடிய விதத்திலே இந்நடவடிக்கை அமைந்திருக்கின்றது. இதேபோன்று விவசாயதுறை மற்றும் விவசாய உற்பத்திகளை அடிப்படையாக கைத்தொழில் அபிவிருத்தி என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவை அனைததும் முழு நாடும் ஒரே கருத்துடன் செல்கின்றது ஒரேவிதமான பொருளாதார திட்டங்களை கருத்தில் எடுத்து செல்கின்றது.

ஆகவே இதனை நாங்கள் நடைமுறைப்படுத்தலாம் என்ற அடிப்படையில் சென்றால் மாகாணங்களுக்கு இருக்கின்ற உரித்துக்கள் பாதிக்கப்பட போகின்றன.

ஆகவே மாகாணங்களுக்கான சட்டங்கள் உரித்துக்கள் தொடர்பாக தெளிவாக வரையறுத்தப்பட்டு சட்டங்கள் கொண்டுவரப்படாமல் இந்த அவசரத்திலேயே இப்பேர்ப்பட்ட சட்டங்கள் கொண்டுவரப்படுவது தமக்கு ஐயத்தை ஏற்படுத்துகின்றது. காரணம் மத்திக்கு சகல அதிகாரங்களையும் எடுத்துக்கொளவதற்கான ஒரு செயற்திட்டமாகவே இது எனக்கு படுகின்றது.

எனவே இது சம்மந்தமான விடயங்கள் ஆராயப்பட்டு மாகாணங்களுக்கு உரிய உரித்துக்கள் தரப்பட்ட பின்னர்தான் இது சம்மந்தமாக நாம்ஆராய வேண்டும் அதனை விடுத்து அதற்கு முன்னர் இதற்கு அனுமதியளிக்க கூடாது என முதலமைச்சர் தனது உரையின் போது குறிப்பிட்டிருந்தார். (செ-4)

## தீக்காயமடைந்த...

படி உயிரிழந்தவராவார்.

குறித்த முதியவர் சுதுமலைப்பகுதியில் தனது மகளுடன் வசித்து வந்துள்ளார். இவர உடல் நிலை சற்று பாதிக்கப்பட்டுள்ளதால் விரைவாக எழுந்திருக்கவும் நடக்கவும் இயலாது இருந்துள்ளார்.

கடந்த 24ஆம் திகதி மாலை வேளையில் தேவைக்காக இவர் தீக்குச்சியில் நெருப்பு பற்ற வைத்த பின்னர் கீழே வீசியுள்ளார். அது அவர் உடுத்திருந்த உடையில் பற்றி எரிவதனை அவதானித்த போது கூக்குரலிட்டு உறவினர்களை உதவிக்கு அழைத்துள்ளார்.

கூக்குரல் கேட்டு ஓடிவந்த அயல் வீட்டில் இருந்த உறவினர்கள் தீயை அணைத்து அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். இந்நிலையில் ஒரு வாரத்தின் பின்னர் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி பிரஸ்தாப முதியவர் உயிரிழந்துள்ளார். குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவவாயம் பிரேம் குமார் மேற்கொண்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)


### விற்பனைக்கு

வெட்கிளுவைக் கதியால், கப்பல் வாழைக்குட்டி விற்பனைக்குண்டு. (7688)

தொடர்புகளுக்கு:
077 111 5360, 076 802 5826

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (4-7428)


## தனியார் மருத்துவக்...

குற்றம்சாட்டி சயிடம் (SAITM) எனும் மாலபே தனியார மருத்துவக் கல்லூரியின் பட்டதாரி ஒருவர் தாக்கல் செய்த மனு தொடர்பாக தீர்ப்பு வழங்கிய போது நீதிபதிகள் இந்த உத்தரவை பிறப்பித்தனர்.

சயிடம் தனியார் மருத்துவக் கல்லூரியினால் வழங்கப்படும் மருத்துவ பட்டத்தில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்ற காரணத்தினால் தகுதியற்ற நபர்களை மருத்துவர்களாக பதிவு செய்துக்கொள்ள முடியாதென்று இலங்கை மருத்துவ சபை தெரிவித்து வந்தது.

ஆனால், நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த தீர்ப்பை அறிவித்த நீதிபதிகள், சயிடம் தனியார் கல்லூரிக்கு மருத்துவ பட்டங்களை வழங்கும் அதிகாரத்தை உயர் கல்வி அமைச்சு சட்ட ரீதியாக வழங்கியுள்ளதாக தெரிவித்தனர்.

ஆகவே அந்த பட்டத்தை நிராகரிக்க இலங்கை மருத்துவ சபைக்கு எந்த விதமான அதிகாரங்களும் இல்லை என்று தெரிவித்த நீதிபதிகள் சம்பந்தப்பட்ட பட்டதாரிகளை பதிவு செய்துகொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசு மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் உப தலைவர் டாக்டர் .நவீன் டி சொய்சா இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வது குறித்து தாங்கள் ஆராய்ந்து வருவதாக தெரிவித்தார்.

இதேவேளையில், தனது சங்கத்தின் மத்தியக் குழு நாளை கூடி தகுந்த தீர்மானங்களை எடுக்கவுள்ளதாக தெரிவித்த டாக்டர் நவீன்டி சொய்சா தகுதியற்ற நபர்கள் அரச மருத்துவ துறையில் சேர்வதை தனது சங்கம் அனுமதிக்காது என்று மேலும் தெரிவித்தார்.

இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட போது உச்ச நீதிமன்ற வளாகம் முன் அமைந்துள்ள பாதையில் நூற்றுக் கணக்கான அரசு மருத்துவ கல்லூரிகளின் மாணவர்கள் ஒன்று கூடி, சயிடம் தனியார் மருத்துவக் கல்லூரியை தடை செய்யுமாறு வலியுறுத்தி அமைதி போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 14 இராணுவத்தினரில்...

காட்டு பகுதிக்கு உறவினருடைய திருமணத்துக்காக சென்ற போது இருவரும் சிறுப்பிட்டி புத்தூர் வாதரவத்தையில் அமைந்திருந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தாக குற்றஞ்சாட்டப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் அச்சுவேலி பொலிஸாரால் 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இராணுவ வீரர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் 16 இராணுவத்தினரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 18 வருடங்களின் பின்னர் சட்டமா அதிபரினால் இவ்விடயம் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு கடந்த வருடத்தில் இருந்து யாழ். நீதவான் நீதிமன்றில் மீண்டும் குறித்த வழக்கு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்பட்ட 16 இராணுவத்தினரில் இருவர் இறந்த நிலையில் ஏனைய 14 இராணுவத்தினரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படும் இராணுவ வீரர்களுக்கு பிணை வழங்கக்கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை மனு விண்ணப்பிக்கப்பட்டது.

அந்த வழக்கு மன்றில் நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி குறித்த இராணுவ வீரர்களுக்கு நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கிய நிலையில் அவர்களை தற்போதைய நீதவான் மீண்டும் விளக்க மறியலில் வைப்பது முறையல்ல எனவும், குறித்த குற்றச்செயல்களுக்கு எவ்வித சாட்சியங்களும் இல்லை எனவும் , சந்தேக நபர்களும் எவ்வித விசாரணைகளு மின்றி தொடர்ந்து விளக்கமறியலில் வைத்திருப்பது குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

எனினும் குறித்த பிணை மனு குறித்து சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகிய அரச சட்டத்தரணி சந்தேக நபர்கள் 14 பேரையும் பிணையில் விடுவிப்பதற்கு கடும் ஆட்சேபனையை தெரிவித்ததுடன் குறித்த வழக்கில் சுருக்க விசாரணைகள் இதுவரை ஆரம்பிக்கவில்லை. இந்நிலையில் சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குவது விசாரணைகளை பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

இருப்பினும் சட்டமாஅதிபரின் பரிசீலணையின் அடிப்படையில் சந்தேக நபர்களில் 2ஆம 3ஆம், 4ஆம், 13ஆம், 14ஆம் எதிரிகளுக்கு பிணை வழங்க ஆட்சேபனை இல்லை எனவும் மிகுதிப்பேர்கள் வழக்கில் முக்கிய குற்றவாளிகளாக காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இதனடிப்படையில் வழக்கை விசாரித்த யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் 2ஆம் 3ஆம் , 4ஆம், 13ஆம் , 14ஆம் எதிரிகளுக்கு பிணை வழங்கியதோடு மிகுதியாக உள்ள 9 இராணுவத்தினரதும் பிணை மனு மன்றினால் நிராகரிக்கப்படுவதாக உத்தரவிட்டார். (செ-9)


### வேலையாட்கள் தேவை

கரிஸ் பிறிண்டேஸ்க்கு கொம்பியூட்டர் ரைப்பிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு:-021 222 0231 (7810)
கந்தர்மடச் சந்தி, யாழ்ப்பாணம்.

### காணி உடனடி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி சந்திக்கு அருகாமையில் (லிங்கம் கூல்பாருக்கு அருகில்) 56-ம் இலக்கத்தில் உள்ள 12 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு :
0774640794, 0776428502 (7686)

### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை) (C-7419)

### எனது பாணியில் 100 கவிதைகள் (ஆங்கிலம்)

15.01.2017இல் யாழ்.திறந்த பல்கலைக்கழக மண்டபத்தில் இராசரத்தினம் றெனோஜ் எழுதி வெளியிட்ட மேற்படி ஆங்கில கவிதை நூல் பூபாலசிங்கம் புத்தக சாலையில் (பஸ் நிலையம் முன்பாக) பெற்றுக் கொள்ளலாம். மாணவர்கள் உட்பட சகலரும் வாங்கிப் படித்து பயன்பெறலாம். (7808)

தொடர்புகளுக்கு:-0778085656

### காசி யாத்திரை

ஆரம்பம்: 10.03.2017 நாள்கள்: 16 யாத்திரீகர்: 20 பேர்

**தரிசிக்கும் இடங்கள்:** டெல்லி, அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப் பார்த்தல், **ஆக்ரா:** தாஜ்மஹால், செங்கோட்டை பார்த்தல் **மதுரா:** கிருஷ்ணஜென்மபூமி **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி (திருவேணிசங்கமம்) தீர்த்தமாடல், சயன ஆஞ்சனேயர் தரிசனம் **சீத்தாமடி:** சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள் **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, காளபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல், அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கை நீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூசை பார்த்தல் **ஹரித்துவார்:** கங்கை நீராடல், 10 இடங்கள் சுற்றிப் பார்த்தல் **ரிஷிகேஸ்:** சிவானந்த ஆச்சிரமம் உட்பட்ட இடங்கள் தரிசனம் **குருச்சேத்திரம்:** பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப் பார்த்தல் அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல் **கயா:** உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல் **புத்தகயா:** புத்தாலயங்கள் 5 பார்த்தல் இராமேஸ்வரம்: (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில், உத்தரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை** வருகை. வான்வலம் **திருப்பதி** விஷ்ணு அலுமேலுமங்கா தரித்து சென்னை வருகை. **எமது சேவை:** 5 விமான ரிக்கட், சுத்தமான குடிநீர், AC வாகனவசதி, மடப்பள்ளி ஆட்கள் சமைத்த மூன்றுவேளை உணவு, காப்பி, ரீ, 2 பேருக்கு தரமான கட்டில், மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், எயார்போட் போகவர வாகன வசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங். (C-7423)

விபரங்கட்கு:
குறைந்த கட்டணம்; நிறைவான தரிசனம் கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன், மகன் - ராஜன்
Office: City Center Shopping Complex
3rd Floor, NO.59, 3/6, Sea Street, Colombo - II. Tel : 077 768 0102, 077 736 2154

### காணி விற்பனைக்கு

A9 வீதி, கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அண்மையாக 56ம் கட்டையில் 2 பரப்பளவு கொண்ட காணி (வர்த்தக மாடிக்கட்டிடம் அமைக்கக் கூடியது) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-0776689565 (7699)

### வீடு வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் மேல் தள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
0778201195, 0212222537 (7696)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வி சங்கீதா மூத்துலிங்கம்



Best Wishes



எமது ஊரினைச் சேர்ந்த செல்வி சங்கீதா முத்துலிங்கம்
அவர்கள் இலங்கை நிர்வாக சேவைப் (S.L.A.S நிலை 38 )
பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெற்றுக் கொண்டமையை
இட்டு பெருமையுடன் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன்
மேன்மேலும் உயர்நிலைகளை அடைய பண்ணாகம்
விசவத்தனை வேலவனை வேண்டி நிற்கின்றோம்.

பண்ணாகம் மக்கள்

(7700)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.